# தினக்கதிர்

வார வெளியீடு

THINAKKATHIR WEEKLY

දිනක්කතිර්

இதழ் - 6 & 7 | பெப்.8-21,1998 | பக்கங்கள்-12 | விலை ரூ.10



பாடசாலை உபகரணங்கள்
பரிசுப் பொருட்களுக்கு
நாடவேண்டிய ஒரேஸ்தாபனம்
ராஜாஸ் புத்தக நிலையம்
111.பிரதான வீதி
மட்டக்களப்பு
T.P: 065-22371



UNIVERSITY OF JAFFNA Library


# பிரபாகரனுக்கு வடக்கு பத்து வருடங்கள் குத்தகைக்கு....!

-சந்திரிகா

## ஒரு அரசியல் நாடகம் அரங்கேறுகிறது



* பத்து வருடங்கள் தேர்தல் இல்லாத புலிகளின் ஆட்சி
* காவல் துறையினராக புலிப் போராளிகள்
* வடக்கில் பறக்கும் புலிக்கொடி



விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வடக்கை பத்து வருடங்களுக்கு தேர்தல் ஒன்றை எதிர் நோக்காமல் ஆட்சி செய்வதற்கு கொடுக்க முடியுமென்று 94-95 காலப் பகுதிகளில் நடைபெற்ற அரசு புலிகள் பேச்சு வார்த்தைகளின் போது பிரபாகரனுக்கு தகவல் அனுப்பியதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரனதுங்க அவர்கள் பெப்ரவரி 9ந்திகதி வெளியான “டைம்” சஞ்சிகைக்கு அளித்துள்ள சிறப்பு பேட்டி யொன்றில் தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து தமது பேட்டியில் குறிப்பிடும் போது வடக்கில் நடைபெறும் புலிகளின் ஆட்சியில் புலிப் போராளிகளை புதிய கட்டமைப்பில் ஆயுதம் தரித்த காவல் துறையினராக பாவிக்கலாம் என தெரிவித்த போதிலும் இதற்குரிய பதிலை பிரபாகரன் தனக்கு அளிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வளவு காலமும் மௌனமாக இருந்த சந்திரிகாவின் பொதுஜனஐக்கிய முன்னனி அரசு தனது நாலாவது வருட ஆட்சிக் காலத்தின் போது இத் தகவலை அவர் வெளியிட்டதின் மர்மம் என்ன? என்று அரசியல் அவதானிகள் வினா எழுப்பியுள்ளனர்.

தனது அரசிற்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போது தனது நண்பர்களான கட்டிடக் கலைஞரையும் இலங்கை வங்கித் தலைவரையும், தமது செயலாளரையும் அனுப்பியதன் மூலம் இவர் நியாயபூர்வமான பேச்சு வார்த்தையில் அக்கறை செலுத்தாமல் பிரபாகரனையும் தமிழ் தேசிய இனத்தின் போராட்டத்தையும் விலைபேசவே முயன்றிருக்கிறார்.

இந்த வகையில் இன்று இலங்கையின் ஐம்பதாவது சுதந்திர தின பொன்விழா நிகழ்வை கேள்விக்குறியதாக்கிய தலதா மாளிகை குண்டுவெடிப்பும், புலிகள் மீதான அரசின் தடையும் ஏற்பட்ட பின்னர் ஜனாதிபதியின் மேற்படி பேட்டி பல சந்தேகங்களை எழுப்புகிறது.

## மட்/மாவட்டத்தில் மீண்டும் முத்திரைகள்

மட்/மாவட்டத்தில் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து சமுர்த்தித் திட்டத்திற்குப் பதிலாக ஒரு மாதத்திற்குரிய 1500 ரூபா முத்திரைகளே வழங்கப் பட்டன.

மீண்டும் ஆறு மாதத்


தொடர்ச்சி 12ம் பக்கம்



உள்ளே!
* தம்பலகாமம் படுகொலைகள்
* கிளிநொச்சி யார் கையில்?
* தலதா மாளிகை குண்டு வெடிப்பு
* பூச்செண்டு
* (சிறுகதை)
* சினிமா பக்கம்
* கவிதாதேசம்
* நமது நூலகம்
* டீன்ஏஜ்ஸ்பெஷல்
* சிறுவர் பகுதி
மற்றும் பல....


## விடுமுறையில் செல்லும் படைகளுக்கு கூடுதல் பாதுகாப்பு

கிழக்குப்பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில் கடந்தவாரம் இடம்பெற்ற கண்ணி வெடிச் சம்பவத்தைத் தொடர்ந்து விடுமுறையில் செல்லும் படையணிகளுக்குகூடிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

வீதிக் காவல் பணியிலும் அதிக படையினர் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் வாகன அணிகள் புறப்பட ஒருமணி நேரத்திற்கு முன்பதாக வீதிகளில் வரும் வாகனங்கள், பொதுமக்கள் தடுத்து நிறுத்தப்படுவதால், அத்தருணத்தில் ஒரு அவசர வேலைக்கும் போக முடியாது உள்ளதாக பொது மக்கள் கவலைப்படுகின்றனர்.




நன்றி - சண்டே லீடர்

## வடக்கு கிழக்கு மாகாண சபை தேர்தல் ஜூன் மாதத்தில்

(நமது அரசியல் நிருபர்)

1990ம் ஆண்டில் கலைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடாத்துவதற்கு அரசு நாட்டம் காட்டி வருவதாக நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கினறன.

வட மாகாணத்திலிருந்து 26 உறுப்பினர்களும் கிழக்கு மாகாணத்திலிருந்து 25 உறுப்பினர்களுமாக மொத்தமாக மேற்படி சபைக்கு 51 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

தீர்வு திட்டம் என்ற பேச்சிலிருந்து தமிழ் கட்சிகளை திசைதிருப்பி தேர்தல்களில் கவனம் செலுத்த வைப்பதற்காக வடக்கு கிழ்க்கு பகுதியில் அடிக்கடி தேர்தலை நடாத்த அரசு முனைந்து நிற்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஆறுமாதத்திற்கு ஒரு தேர்தலை நடாத்தி தமிழ் மக்களையும் தமிழ் கட்சிகளையும் அரசு போக்கு காட்டி வருகிறது.

வட மாகாணத்திலிருந்து 26 உறுப்பினர்களும், கிழக்கு மாகாணத்திலிருந்து 25 உறுப்பினர்களுமாக மேற்படி சபைக்கு மொத்தமாக 51 உறுப்பினர்கள் தெரிவ செய்யப்படுவர்.

வட மாகாணத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் முழுமையாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான் கரைப்பகுதியும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளாகும். அப்பகுதிகளில் தேர்தலை நடாத்த முடியாது.

மாகாணசபைத்தேர்தல் நடாத்தப்படுமானால் அதில் போட்டியிட தமிழ் கட்சிகள் ஆர்வம் கொண்டுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி புளொட், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, முஸ்லிம் காங்கிரஸ் என பல முனைகளால் போட்டி இடம் பெறலாம்.

இலங்கை, இந்திய ஒப்பந்தத் தையடுத்து 1988ம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடாத்தப் பட்டது.

வடமாகாணத்தில் இந்திய இராணுவம் ஈ.பி.ஆர்.எல்.எவ், கட்சியைதவிர வேறு எவரும் நியமனப்பத்திரம் தாக்கல் செய்ய அனுமதிக்கவில்லை. நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் காலத்தில் யாழ். கச்சேரிப்பகுதியில் எவரும் செல்ல அனுமதிக்கப்படாத அதேவேளை 100 ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை கொண்டு சென்றவர்களிடம் அப்பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்திய இராணுவத்தின் ஆதரவில் இருந்த வரதராஜ பெருமாள் தலைமையிலான வடக்கு, கிழக்கு மாகாண அரசு இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறியதுடன் செயலிழந்து போனது.

இதையடுத்து 1990ம் ஆண்டில் மாகாணசபையை கலைக்கும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையடுத்து வடக்கு, கிழக்கு மாகாணசபை சட்டப்படி கலைக்கப்பட்டது.

சபை கலைக்கப்பட்ட போதிலும் மாகாணசபை தவிசாளர் பொன்.இராசகாரியர் தொடர்ந்து அப்பதவியை வகித்து வருகிறார்.

அடுத்தசபை தெரிவுசெய்யப்பட்டு அச்சபையிடம் பொறுப்புக்களை கையளிக்கும் வரை தவிசாளர் பதவியை வகிக்க சட்டத்தில் இடமுண்டு.

தமிழ் பேசும் மக்களின் குரலாக தினக்கதிர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்கதிர்

த.பெ.இல. 06.
0, புனித மைக்கல் வீதி,
மட்டக்களப்பு.
☎ 065-23055.


உலகின் பொதுமொழி அன்பாகும்
அதை உணர்த்துவதே தமிழ் பண்பாகும்.

## போலித்தனங்கள்

உத்தியோக பற்றற்ற ஊரடங்கை அமுல்படுத்தி சுதந்திர பொன்விழாவை அரசாங்கம் நடாத்தி முடித்திருக்கிறது.

பொதுமக்கள் எவரும் பங்குபற்றாத ஈடுபாடு கொள்ளாத பிரதான வைபவம் கோட்டே ஜெயவர்த்தனபுரவில் பத்தாயிரம் படையினரின் பாதுகாப்புடன் நடந்தேறியிருககிறது.

இயந்திர துப்பாக்கிகள் தாங்கிய இராணுவ கொமாண்டோக்களின் பாதுகாப்புடன் ஜனாதிபதி இந்த நிகழ்வில் பங்குபற்றினார்.

கிபீர், சுப்ப சொனிக் விமானங்களும் ஆறு பென்ரக ஹெலிகொப்டர்கள் ஐந்தும் எம்.ஐ.24 ரக ஹெலிகெரப்டர்களும் பாதுகாப்பு வழங்கின.

பன்னிரண்டு டாங்கிகள் குண்டு துளைக்காத கார்கள், கவசவாகனங்கள் என்பனவும் ஈடுபடுத்தப்பட்டன.

இராணுவ மயப்படுத்தப்பட்ட சுதந்திர பொன்விழா கொழும்பில் நடைபெற்ற அதேவேளை மட்டக்களப்பில் சுதந்திர பொன்விழா நிகழ்வுகளையே நடாத்த முடியாமலிருந்தது.

அன்று மட்டக்களப்பில் வீதியில் நடமாடக்கூட அனுமதிக்கப்படவில்லை.

ஆட்சியில் இருக்கும் அரசும் இனப்பிரச்சனையை தீர்த்து வைப்பதற்கு பதிலாக அதற்கு நெய் ஊற்றி எரிய வைத்ததன் மூலம் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் சுதந்திரத்தை இழந்து விட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

தம்பலகாமத்தில் அப்பாவி தமிழ் மக்கள் எட்டுப்பேர் அரச படைகளால் அநியாயமாக கொலை செய்யப் பட்டனர்.

இத்தகைய படுகொலை களை புரிந்ததன் மூலம் இந்த அரசாங்கம் இனப்பிரச்சனை தொடர்பான அனுகு முறையில் முற்றாகவே தோல்விகண்டு விட்டது என்பதைத் தெளிவாக காட்டுகிறது.

இனப்பிரச்சனைக்கு சமாதான வழியில் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்படும் என மேடையில் முழங்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி தலைவர்கள் போரை உக்கிரப் படுத்தி அதை ஊக்கப்படுத்துவதிலேயே முன்நிற்கின்றனர்.

தமிழர்களை நானே தலைமைதாங்கி தாக்குவேன் என்றவர்கள் அதை செயலிலும் காட்டி வருகின்றனர்.

தம்பலகாமத்தில் கொலை செய்யப்பட்ட எட்டுப் பேரும் "பயங்கரவாதிகள்" என முத்திரை குத்திய படையினர் பின்னர் அவர்கள் அப்பாவி பொதுமக்கள் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் கொலையாளிகள் தண்டிக்கப்படவும் இல்லை. அதற்காக அரசாங்கம் பொது மன்னிப்பு கோரவும் இல்லை.

வடகிழக்கில் காலம் காலமாக நடைபெறும் படுகொலைகளும் அழிவுகளும் இப்படித்தான் நடைபெறுகின்றன.

அப்பாவிகளை கொல்லுவதும் அவர்களை பயங்கரவாதிகள் என்பதும் காலம் காலமாகவே நடைபெற்று வரும் சம்பவங்கள் தான்.

இந்நிலையில் தான் சமாதான தேசத்தை கட்டி எழுப்பப்போவதாக சுதந்திரதின பொன் விழாவில் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

போரின் எரிநெருப்பிற்கு நெய்வார்த்துக் கொண்டு வசந்தகால கதவுகள் திறந்திருக்கின்றன. "வாருங்கள்" என வரவேற்பது அரசின் போலித்தனத்தையே காட்டுகிறது.

இது இன்றைய ஜனாதிபதி சந்திரிகாவின் தவறு மட்டுமல்ல கடந்த சிங்கள தலைமைகள் காலம் காலமாக இவ்வாறு தான் வழிகாட்டியிருக்கின்றன.

## கிழக்கிலங்கையின் அரசியல் விஞ்ஞான ஆசான் வசந்தராசப்பிள்ளை

- எஸ்.வி. ஜீவா -

"சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டும்" என்றார் கவிமணி. அதற்கேற்ப நற்செய்கையில் சிறந்து விளங்கி அமரத்துவம் அடைந்துவிட்ட அமரர் வசந்தராசப் பிள்ளை பிறப்பிடத்தால், அவர் களுதாவளைக்கு சொந்தமானவரான போதும் சேவையால் அவர்கிழக்கிலங்கையின் ஒளி விளக்காய் திகழ்ந்து பல கல்விமான்களை உலகிற்கு விதைத்துவிட்ட ஆசானாவார்.

வரலாற்றில் அரசியல் விஞ்ஞான மலையொன்று சரிந்தது. வற்றிவிடாத கங்கை நதியிலிருந்து ஓர் துளி உதிர்ந்தது. சற்றுமே எதிர்பாராமல் மானிடத்தருவியாய் மலர் ஒன்று உதிர்ந்தது எம்மை விட்டுப்பிரிந்து சென்றாலும் ஏழேழு உலகிற்கும் அன்னாரின் கல்விப் பணி அயராது.

மாணவர்களின் மனங்களில் வசந்தம் வீச, எவர்க்கும் விளங்கக்கூடிய அழகு தமிழில் அரசியல் விஞ்ஞான பாடத்தைச் சிம்மக் குரலில் சிரித்த முகத்தோடு விளக்கி நின்ற தனிப்பாணியும் எத்தனையோ, மாணவ மணிகள் திறமைசித்தி பெற்று உயர் நிலையடைய அரும்பெரும் சேவை யாற்றிய சேவகனின் அரும்பணி எமது மனதில் நிழலாடுகின்து.

குறிப்புக் கொப்பியோ, புத்தகங்களோ இன்றி நடைமுறைக்கருத்துக்களை இணைத்து காளமேகம் கவி பாடுவது போன்று

### அஞ்சலிக் குறிப்பு



அறிவு மழை பொழிந்தமையையும், தனக்கே உரித்தான நகைச்சுவை பாணியையும் நம்பிக்கையூட்டும் வகையில் இதமாக மாணவர் மனங்களில் பதியவைத்த எமது ஆசானை இழந்துவிட்டோமா? என வினா தொடுக்கவேண்டி வருகிறது.

தன்னலம் பாராது பொது நலம் தேடிச்சேவை செய்ய வேண்டுமென்று தன்னுயிரை துச்சமென எண்ணி இறுதிமூச்சு வரையும் தன்னுடைய கல்விப் பணியே நற்பணியென்று எண்ணி அனுவளவும் பிசகாத சேவையினால் அன்னாரின் பூதவுடல் அழிந்தாலும் புகழ் உடல் அழியாது.

அரசியல் தெரிந்திடாத மாணவர்களை அரவணைத்து ஆதரவாய் கற்பித்து, துயர் துடைத்த பெருமகனுக்கு நாம் எவ்வாறு நன்றி சொல்வோம். ஐயா உங்கள் ஆத்மா தேவர்கள் வாழுகின்ற உலகில் கல்விப்பணி புரிந்திடவா? காலன் அழைத்தான்.

மரணத்தின் பின்னரே மனித புகழ் பாடப்படும் மானுட பண்பாடாய் மாமலையின் புகழ் கோடிட்டு காட்டப்பட்டபோது, பெருமை ஒரு புறமும், அழுகை ஒரு பறமுமாய் ஊரும் அங்கு கூடிய உறவுகளும் காணப்பட்ட காட்சி அமரர் வசந்தராசப்பிள்ளை ஐயாவின் பெருமையை அகத்தில் பதிந்துவிட்டது.

உயர்வான குணம் படைத்த உத்தமரை உலகிற்கு படைத்து கல்வி தொண்டாற்ற ஒரு சில காலம் கொடுத்த கடவுளுக்கு அன்னாரின் பணியால் உயர்வடைந்த மாணவர்களைக்கண்ட தர்மதேவதை சலித்துத்தான் எடுத்தாரோ?

அன்னாரின் மீளாத்துயில் அரசறிவியலை பாடமாக பயிலும் அனைவருக்கும் பேரிடியாகவும், பின்னடைவையுமே ஏற்படுத்தி இருக்கின்றது என்றால் யாரும் வியப்படைய மாட்டார்கள்.

## வந்தாறுமூலை கண்ணிவெடி தரைப்படையினருக்கு பெரும் சவால்

மட்டக்களப்புக்கான விமான சேவைகளும் நிறுத்தப்பட்ட நிலையில் வந்தாறுமூலையில் நடந்த கண்ணி வெடி தாக்குதல் சம்பவம் படையினருக்கான தரை வழிப் போக்குவரத்தையும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

மட்டக்களப்பிலுள்ள படையினருக்கான உணவு விநியோகம் உட்பட அனைத்து சேவைகளும் தரை மார்க்கமாகவே நடைபெறுகின்றன.

மட்டக்களப்பு பொலன றுவை பிரதான வீதியில் பலத்த சோதனையின் பின்னர் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இராணுவ வாகன தொடரணி செல்வது வழக்கம்! கவசவாகனங்கள், தரைப்படையினரின் பாதுகாப்புகளுக்கு மத்தியில் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் படையினருக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளதாக இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மட்டக்களப்பு வந்தாறு மூலையில் புதன் நண்பகல் கண்ணி செடி தாக்குதல் இடம் பெற்ற இடத்தில் சுமார் 8 அடி ஆழமான குழி காணப்படுகிறது.

தாக்குதலுக்கு இலக்கான பஸ் வண்டி 25 அடிக்கப்பால் தூக்கி வீசப்பட்டிருந்தது.

இந்த சம்பவத்தின் போது காயமடைந்த இராணுவத்தினர் ஒருவர் பல்கலைக்கழக உப தபால் அலுவலகத்துக்குள் புகுந்து தபால் அலுவலரை சுட எத்தனித்த போது. அதை அவதானித்த படை அதிகாரி அந்நபரின் துப்பாக்கியைப் பறித்து ஊழியரைக் காப்பாற்றினார்

கடந்த காலங்களில் இப்பகுதிகளில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்களில் பல அப்பாவிப் பொதுமக்கள் பலியாகி உள்ள நிலையில் மேற்படி சம்பவத்தின் போது படையினர் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தாதது குறித்து அப்பகுதி மக்கள் நிம்மதியடைந்துள்ளனர்.

## சுதந்திர தினத்தில் துரத்தப்பட்ட நோயாளர்கள்

(மட்டக்களப்பு நிருபர்)

வைத்திய சேவை என்பது சகலருக்கும் சமம் என்பது பொது விதி. ஆனால் மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் அந்த பொது விதி அப்பட்டமாக மீறப்படுவதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இதற்கு உதாரணமாக கடந்த பெப்ரவரி 4ந் திகதி சுதந்திர தினத்தன்று மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் சில சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

அன்று காலை "ஷெல்" தாக்குதல்களால் சில படையினர் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டனர்.

படையினர் அனுமதிக்கப்பட்டதும் பல நோயாளிக்கள் டிலை விட்டு இறக்கப்பட்டனர். கட்டாயப்படுத்தி வீட்டுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். அன்று போக்குவரத்து எதுவுமின்றி நோயாளர்கள் வெளி நோயாளர் பிரிவிலேயே நாள் முழுவதும் தங்க நேரிட்டது.

பாரதூரமான காயக்கார்ர்களான பொதுமக்களை கட்டிலை விட்டு இறக்கி விட்டு சின்னஞ்சிறிய காயம் உள்ள படையினரை கட்டிலில் படுக்க வைத்தனர்.

இதனை செய்தவர்கள் படையினர் அல்ல. அங்கு வேலை செய்யும் தமிழ் ஊழியர்களே.

ஒரு நோயாளிக்கு பழைய மருந்தை கழற்றி விட்டு புதிய மருந்தை கட்டுவதற்கு முன் மருந்து கட்ட வேண்டிய தாதி படையினரை பராமரிக்க சென்று விட்டார்.

நோயாளி சிறிது நேரத்தில் மருந்து கட்டும் இடத்திலிருந்து விரட்டப்பட்டார். அன்று மாலையே அந்த நோயாளிக்கு மருந்து கட்டப்பட்டது.

நோயளர்கள் என்ற ரீதியில் சகலரும் சமம் என்ற நிலையை தோற்றுவிக்க வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?

தினக்கதிர் பற்றிய உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மண்ணில் மீண்டும் கோரத்தாண்டவம்

தம்பலகாமத்தில் எட்டுத் தமிழர்களை எவ்வித காரணங்களு மின்றி பொலிஸ் சுட்டுக்கொன்று ள்ளது.இக் காட்டுமிராண்டித்தனமான செயல் பெப்ரவரி 1ந்திகதி அதிகா லையிலேயே இடம்பெற்றுள்ளது.

ஜனவரி 31ந்திகதி இரவு 11மணி தொடக்கம் பொலிஸ் காவலரணில் இருந்து சரமாரியாக வெடிகள் தீர்க்கப்பட்டன. இடை விடாமல் இவ்வாறு தீர்க்கப்பட்ட ரவைகள் மூவாயிரத்திற்கும் அதிகமானவை என பொலிஸ் அதிகாரி யொருவர் பின்னர் தெரிவித்துள்ளார்.

வெடிச்சத்தத்தால் உறைந்துபோன மக்கள் வெளியே வராமல் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கொண்டனர். கணேச லிங்கம் உதயக்குமார் என்பவரின் புதுவீடு குடிபுகுவிழாவில் கலந்து கொள்ள வந்த மக்களும் இதில் அடக்கம்.

விடிந்ததும் காக்கி உடை யில் வந்தவர்களே புதுமனை குடிபுகுவிழா வீட்டில் அழைத்து அங்குள்ள ஆண்களை வெளியே இழுத்திருக்கிறார்கள். வந்தவர்கள் சுமார் இருபத்தைந்து போலிருக்கும். தடுத்த பெண்களைத் தாக்கிவிட்டு ஆறு ஆண்களைக்கொண்டு சென்று சுட்டுக்கொன்றார்கள். ஒரே தாய் பிள்ளைகளான அமிர்தலிங்கம் கஜேந்திரன் (க.பொ.த.சா.த.மாணவர்) அமிர்தலிங்கம் சுரேந்திரன் (9ம் ஆண்டு மாணவன்) ஆகியோரும் முருகேசு ஜனகன்(10ம் ஆண்டு மாணவன்) சுப்பிரமணியம் திவாகரன் (23வயது) இரத்தினம் சிவலிங்கம் (24வயது) நாகன் பவளநாதன் (29வயது) ஆகிய ஆறுபேரையும் சுட்டுவிட்டு பக்கத்துத் தெருவிலுள்ள வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த ஆண்களை பொன்னன் கனக சபை(47வயது) ஆறுமுகம் சேகர்(32வயது) ஆகியோரையும் கதறக்கதற சுட்டுக்கொன்று வெறியாட்டம் ஆடியிருக்கிறார்கள். சடலங்களிலுள்ள உடைகளை அகற்றிவிட்டு வேறுஉடைகளை அணிவித்து புலிகள் என்று ஒத்துக்கொண்டால் பிரேதங்க ளைத்தருவோம் என்றும் குடும்பத் தாரையும் பயமுறுத்தி உள்ளார்கள்.



படுகொலை செய்யப்பட்ட இளைஞர்

எனினும் மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்ததையடுத்து



படுகொலை செய்யப்பட்டவர்களின் இறுதி அடக்க நிகழ்வு

## தம்பலகாமம் படுகொலைகள்

கந்தளாய் பொலிஸ் அத்தியட்சகர் திரு. நிகால் கனகரத்தின உட்பட உயரதிகாரிகள் சம்பவம் நடந்த இடத்துக்கு விஜயம் செய்து நேரில் பார்வையிட்டதுடன் கொல்லப் பட்டவர்கள் புலிகளல்லர் சாதாரண மக்களே என்பதை ஏற்றுக்கொண்டு வருத்தம்தெரிவித்துள்ளார்.

மக்களின் கேள்விகளுக்குப் பொறுமையுடன் பதில் கூறிய பொலிஸ் அத்தியட்சகர் இது சம்பந்த மாக பூரண விசாரணைகள் நடத்தப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்களென்றும், இறந்தோருக்கு நஸ்டஈடு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படுமென்வும் பெருந்திரளான மக்கள் முன்னிலை யில் தெரிவித்தார்.

புளொட், ஈ.பி.டி.பி கட்சி களின் உறுப்பினர்களும் மக்களுடன் நின்று உதவிபுரிந்துள்ளனர்.

# கிளிநொச்சி தாக்குதல் படையினருக்கு சவால்

# ஓரடிமுன்னால்.......!ஈரடி பின்னால்.........!

வவுனியா - யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையைக் கைப்பற்றி பெப்ரவரி 4 இல் கிளிநொச்சியில் தேசியக்கொடியை பறக்க விடுவோம் என இலங்கையில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை பகிரங்கமாக சூளுரைத்த போது வன்னிக் காட்டுக்குள் இருந்துகொண்டு விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கிளிநொச்சியில் அதற்கிடையில் புலிக்கொடியைப்பறக்க விடுவோம் என உறுதிமொழி எடுத்திருப்பார் போலத் தோன்றுகிறது.

ஏனெனில் பெப்ரவரி 1 இல் கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு என ஏககாலத்தில் 3 இராணுவத்தினர்களையும் தாக்கி கிளிநொச்சி நகரினை இன்றுவரை தக்க வைப்பதற்கு புலிகள் அதிக விலையைக் கொடுத்திருப்பது போல் தெரிகிறது.

கண்டியில் இடம்பெற விருந்த சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டங்களைஅங்கு நடை பெறாது தடுத்து கிட்டத்தட்ட ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்ட வேளையில் எவ்வாறு இருக்குமோ அந்நிலைமையில் கொழும்பு நகரை சுதந்திர தினத்தன்று இருக்க வைப்பதில் புலிகள் வெற்றி கண்டனர்.

அது மட்டுமன்றி சுதந்திர மடைந்ததன் முதற் தடவையாக இம்முறை மட்டக்களப்பில் சுதந்திரக்கொடி ஏற்றி வைத்து கச்சேரியில் நடைபெறும் பிரதான வைபவம் கூட புலிகளால் தடை ப்படுத்தப் பட்டுள்ளது.

இப்பொன்விழா நிகழ்சி யில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வேல்ஸ் இள வரசன் சாள்ஸ், நாட்டைவிட்டுப் புறப்பட்டு சரியாக 6 மணித்தியா லங்களில் தற்கொலையாளி யொருவர் கொழும்பு கொம்பனித் தெருவில் குண்டொன்றை வெடி க்க வைத்து தன்னைத்தானே மாய்த்துக்கொண்டுள்ளார்.

3ஆம் திகதி இரவு வந்தாறு மூலையிலும், போர தீவிலும் புலிகள் மின் இணைப் பைத் துண்டித்ததனால் கொழும் பில் நடத்தப்பட்ட சுதந்திரதின நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் கூட மட்டக்களப்பு மாவட்டப் பொதுமக்களால் பார்க்க முடியவில்லை.

96 வீதமான யுத்தம் முடிந்து விட்டது இன்னமும் 4 வீதமே வெல்வதற்குள்ளது எனக் கூறும் பிரகடனத்தின்படி பார்த்தால் மிகவும் பலவீனமான நிலையில் புலிகள் நடத்தும் தாக்குதல்களே இவ்வாறு இருந்தால் 100 வீத யுத்தம் நடை பெற்றால் என்ன வழி? நினைக்கவே நெஞ்சம் கலங்குகின்றது.

சுதந்திர தினக் கொண் டாட்டங்களில் பங்கு கொள்ளவும் பாதுகாப்பு எற்பாடுகளுக்காகவும் கிளிநொச்சி, பரந்தன், ஆனையி றவுப் பகுதிகளிலிருந்த துருப்புக்க ளின் ஒரு பகுதியினரும் கவசவாக னங்களிலும் வாப்ஸ் பெறப் பட்டிருந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திய புலிகள் இப்பகு தியில் முனைகளில் தாக்குதல் களை தொடுத்தனர். இவற்றில் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற புலிகள் அம்முனைகளினூடாக ஊடுருவினர்.

கிளிநொச்சிப் பகுதியில் புலிகள் பெருமளவில் குவிவதாக புலனாய்வு அறிக்கைகள் கிடைத் ததை தொடர்ந்து இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் றொகான் தழுவத்த குடாநாட்டி லுள்ள தலைமைப் பீடங்களை எச்சரிக்கை செய்திருந்தும் அவை புலிகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஞாயிறு அதி காலை 1.30 அளவில் ஆனையிறவு உப்பளத்தின் அருகே உள்ள பாதுகாப்பு அரண்களைத் தகர்த்து புலிகள் உட்புகுந்தனர்- தொலை பேசி உட்பட ஏனைய தொலைத்

> புலிகளை ஒடுக்குவதே தமது அரசியல் மேலாண்மைக்கு வழியெனக்கருதும் அரசுக்குப் புலிகளின் கிளிநொச்சித் தாக்குதல்களும் கொடியேற்றமும் ஒரு நெத்தியடிதான் ஒரு வாரத்துக்கு மேலாக புலிகள் தாம் கைப்பற்றிய நகரைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

தொடர்புகளுக்கு 200 அடி உயரமான தொலைத்தொடர்பு கோபுரம் கரும்புலிகளால் சேத மாக்கப்பட்டது. இதன் மூலம் பலாலிக்கும் ஆனையிறவுக்கும் இடையிலான தொடர்புகளைத் துண்டிப்பதே புலிகளின் நோக்க மாகும்.

இராணுவ வட்டாரங் களின் படி புலிகள் தாங்கள் முல்லைத்தீவில கைப்பற்றிய 120மி.மீ ஆட்லறிகள் மூலம் ஆனையிறவு பரந்தன் தளங்களின் மீது தொடர்ச்சியாக தாக்குதல் களை நடாத்தி மூன்று கட்டடங் களுக்கும் சேதங்களை விளை வித்தனர்.

இதே வேளை 130 மில்லிமீற்றர் ஆட்லறி துப்பாக்கி களைக் கைப்பற்ற புலிகள் எடுத்த முயற்சியொன்று வானில் நடமாடும் படைப்பிரிவினால் முறியடிக் கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை கிளி நொச்சியின் கிழக்கு மேற்கு முனைகளில் புலிகள் தாக்குதல் தொடுத்தனர். கிழக்கு முனையில் தாக்குதல் முறியடிக்கப்பட்ட போதிலும் மேற்கு முனையில் உக்கிரமான சண்டை இடம் பெற்றதையடுத்து படையினர் பின்வாங்கினர்.வடக்காக கரடிப் போக்குச் சந்திவரை பின்வாங்கி யுள்ளனர்.

இதனையடுத்து நகரைக் கைப்பற்றிய புலிகள் ... கொடிகளைக் பறக்கவிட்டனர். இராணுவத் தளபாடங்களையும் முக்கியமான ஆவணங்கள் பலவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

எனினும் இவற்றின் விபரங்கள் சண்டையின் முடிவிலேயே புலிக ளால் வெளியிடப்படுமெனத் தெரிகிறது. புலிகளின் ஆட்டிலறித் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்கு ஏதுவாக பாதுகாப்பு எற்பாடுகள் படையினரால் கிளிநொச்சி நகரில் செய்யப்பட்டிருந்ததனால் தற்போது புலிகளின் கைகளிலிருந்து நகரை மீளக் கைப்பற்றுவது படையின ருக்குக் கடினமாயுள்ளது.

இந்த மோதல்களில் புலிகள் தங்கள் போராளிகளில் சுமார் 200 பேர்வரை இழந்துள்ள நிலையில் படைத்தரப்போ புலிகளின் இழப்பு 450 ஐத் தாண்டி

> இந்தப் பிண்ணனியில் புலிகள் கிளிநொச்சியை மீள இழந்தால் கூட அது அவர்களை பெரிதாகப் பாதிக்கப்போவதில்லை. ஏனெனில் அவர்கள் ஏற்கனவே யுத்த முனைகளைப் பரவலாக்கியுள்ளதுடன் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின் பல சவால்களையும் முறியடித்துள்ளனர்.

விட்டதாகத் தெரிவிக்கின்றது. இதே வேளை சுமார் 400 படை வீரர்கள் இத்தாக்குதல்களில் கொல்லப் பட்டதுடன் இத்தொகையை விட அதிகமானோர் படுகாயங்களுக்கு இலக்காகியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

சுமார் 200க்கு மேற்பட்ட பலியான புலிகளின் உடல்களைத் தாங்கள் கைப்பற்றியுள்ளதாகவும், அவற்றை ஐ.சி.ஆர்.சி ஊடாக கையளிக்க நடவடிக்கையெடுத் துள்ளதாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்ட போதிலும், இந்த உடல்கள் புலிகளிடம் கையளிக் கப்படவுமில்லை, தொலைக் காட்சியில் முழுமையாகக் காட்டப்படவுமில்லை.

இதே வேளை புலிகள் மடுவிலுள்ள ஐ.சி,ஆர்.சி அதிகாரிக ளினூடாக ஒப்படைத்துள்ளனர்.

கிளிநொச்சி தாக்குதல் இன்னும் முடிந்துவிடவில்லை. நகரைக் கைப்பற்றி தக்கவைத்துக் கொண்டுள்ள புலிகளிடமிருந்து நகரை மீண்டும் கைப்பற்ற படைத்தரப்பு பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறது. தந்திரோ பாயமாகவே தாம் கரடிப்போக்குப் பகுதிக்குப் பின்வாங்கியதாகப் படைத்தரப்பு தெரிவிக்கின்றது. இந்நிலையில் 7ம் திகதி சனிக் கிழமை பிரதி பாதுகாப்பு அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

சண்டை தொடர்ந்து இடம் பெற்று வரும் நிலையில் இதன் முடிவு எவ்வாறு அமையும் என எதிர்வு கூறுவது கடினமாக இருக்கின்ற போதிலும், இதன் விளைவை அனுமானிக்க முடியும்.

ஆனால் புலிகளின் கரங்களில் கிளிநொச்சி நகர் இருக்கும் ஒவ் வொரு கணமும் அது பாதுகாப்புப் படையினரின் மனவுறுதிக்குப் புலிகள் வைத்துள்ள வேட்டு என்பதனை மறுக்க முடியாது.

ஸ்ராலின்

நன்றி: ஸண்டே ரைம்ஸ்

## வாசகர்களுக்கு

தினக்கதிர் 8வது இதழ் தொடக்கம் பிரதி புதன் கிழமை தோறும் உங்கள் கரங்களில் தவழும் என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச் சியுடன் அறியத்தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சுதந்திரதினம், தமிழருக்கு உரியதா?

## ஆங்கிலேயரிடம் இழந்த இறைமையை இன்றுவரை திரும்பப்பெறாத தமிழர்

இலங்கை தனது சுதந்திரப் பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கையில் நாட்டின் ஒரு பகுதி இன்னமும் தமிழீழ விடுத்லைப்புலிகளின் பலமான கட்டுப்பாட்டில் உள்ளதே என்ற உண்மை அரசிலும் எதிர்கட்சியிலும் உள்ள பலரின் மனதில் சங்கடமான உணர்வையே தோற்றுவித்திருக்கும். பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் கூற்றின் படி இன்னும் 4 வீதமான பகுதியே வெல்லப் படவேண்டும் என்ற போதிலும் யதார்த்தத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளும், முல்லைத்தீவு மாவட்டம் முழுமையாகவும், திருமலை, வவுனியா, யாழ், மன்னார், கிளிநொச்சி, அம்பாறை மாவட்டங்களின் பல பகுதிகளும் இன்றுவரை புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. அதே வேளை புலிகளின் பிரசன்னமோ இலங்கையின் அனைத்துப் பகுதியிலும் உள்ளது. நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடத்தில் அவர்களால் தாக்குதல்களை நடாத்தக்கூடியதாகவே உள்ளது. ஆய்வாளர்களின் கருத்துப்படி சுதந்திரத்தின் பின் 33 வருடங்களாக மாத்திரமே இலங்கையின் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்துள்ளனர். ஆனால் தமிழர் தரப்போ என்று ஆங்கிலேயர் இலங்கையில் காலடி வைத்தனரோ அன்று தமது சுதந்திரத்தை இழந்தனர் என்கின்றனர். தமிழரின் இறைமையைக் காப்பாற்றிக் கொள்ள நல்லூரை இராசதானியாகக் கொண்டிருந்த மன்னன் சங்கிலியன், வன்னி மன்னன் பண்டார வன்னியன் ஆகியோர் வீரம் செறிந்த போராட்டங்களை நடாத்தியிருந்தனர். அவர்கள் முறியடிக்கப்பட்டதுடன் தமிழர்களின் இறைமையும் பறிக்கப்பட்டது.

1948 இல் பிரித்தானிய அரசு இலங்கைக்கு சுதந்திரத்தினை வழங்கிய போது தமிழர்களின் இறைமை அவர்களிடம் வழங்கப்படவில்லை. மாறாக சிங்களவர்களிடம் முழு இலங்கையின் ஆட்சிப் பொறுப்பும் மாற்றிக் கொடுக்கப்பட்டது.

தமது இறைமை ஆங்கிலேயரிடம் இருந்தபோதே, பின்னாளில் அது சிங்கள மக்களின் கைகளுக்கு மாறிய போதோ அதிகம் கவலை கொண்டிராத தமிழ் மக்கள் தனிச் சிங்களச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு அதன் விளைவாக தமிழர்களுக்கு எதிரான முதலாவது கலவரம் உருவான போதே விழித்துக் கொண்டனர். தொடர்ந்து வாக்குறுதிகள் மீறப்பட்டமை, தரப்படுத்தல், 72ம் ஆண்டு குடியரசு அரசியல் யாப்பில் தமிழர்களுக்கு ஏற்கனவே சோல்பரி யாப்பில் வழங்கப்பட்டிருந்த உரிமைகள் பறிக்கப்பட்டமை, அஹிம்சைப் போராட்டங்கள் ஆயுதரீதியில் அடக்கப்பட்டமை, பௌத்த மதத்திற்கு விசேட உரிமைகள் வழங்கப்பட்டமை என பல்வேறு நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கில் ஆயுதப்போராட்டம் உருவாகுவதற்கு வித்திட்டன.

இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டமை, சித்திரவதை செய்யப்பட்டமை, யாழ்ப்பாண உலக தமிழாராய்ச்சி மகாநாட்டு அனர்த்தம் எனப் பல்வேறு சம்பவங்கள் மூலம் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமான இடைவெளி விரியத் தொடங்கியது.

யாழ். நூலக எரிப்பு தமிழ் மக்களின் உயர் நிலையில் ஒரு பாரிய அடியாக அமைந்திருந்தது என்றால் 83 ஆடிக்கலவரங்கள் வாழ்வில் மறக்கமுடியாத ஒரு பேரிடியாகவே மாறிவிட்டிருந்தது.

தமிழர்களைப் பொறுத்தவரை இன விடுதலைக்கான இப்போர் 74ம் ஆண்டில் ஆரம்பமானது என்ற போதிலும் அரசாங்கத்தைப் பொறுத்தவரை 1981 அக்டோபர் 15இல் காங்கேசன் துறையில் லான்ஸ் கோப்ரல் ஹேவாவசம், இராணுவவீரர் திரேசா, ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டதுடனேயே ஆரம்பித்தது.

1981ல் இலங்கை இராணுவம் 530 அதிகாரிகளையும், 9500 வீரர்களையும் கொண்ட ஒரு சம்பிரதாய பூர்வமான இராணுவமாகவே இருந்தது. வழக்கமாக பெப்ரவரி 4ல் முகாம்களிலிருந்து வெளிவந்து சுதந்திரதினத்தன்று அணிவகுப்பில் ஈடுபடுவது மாத்திரமே இவர்களின் வேலையாக இருந்தது. ஆனால் இன்று 105,000 பேரைக் கொண்ட பாரிய இராணுவமாக மாறியுள்ளது.

1949இல் பிரிட்டிஷ் உற்பத்தியின் ஒரு சில கவச வாகனங்களுடனும் 303 ரக ரைபிள்களுடனும் காட்சியளித்த இந்த இராணுவம் தற்போது அபிவிருத்தியடைந்த நாடுகளின் இராணுவத்தைப்போன்று யுத்த தாங்கிகள், எறிகணைகள், மோட்டார்கள், நவீன ரக ரைபிள்கள் என தமது பலத்தைப் பெருக்கியுள்ளது. அத்துடன் புலிகளின் நவீன ரக ஆயுதங்களை எதிர்கொள்ள வானொலி நிலைகளை அறிந்து கொள்ளப்பயன்படும் கருவிகள், ரொக்கட்டுக்கள், கிரனேட்டுஏவிகள் எனப் பல்வேறு நவீன கருவிகளையும் கொள்வனவு செய்துள்ளது.

இதேவேளை விடுதலைப்புலிகளோ உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த, சிறந்த, நவீனத்துவம் உடைய முறியடிக்க முடியாத கெரில்லாக்களாக விளங்கிவருகின்றனர். இவர்கள் நன்கு ஆயுதம் தரித்தவர்களாகவும், நல்ல பொருளாதார வளத்தை உடையவர்களாகவும், நன்கு பயிற்சி பெற்றவர்களாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல மனவுறுதி படைத்தவர்களாகவும், இலட்சிய வெறியுடையவர்களாகவும் விளங்குகின்றனர்.

யுத்த முனையில் பெருமளவு நிலப்பரப்பை தமது

தொடர்ச்சி 12ம் பக்கம்




## 'சுயநலம்'

ஏ.ஜெயகலா

கடிகாரம் 7.30 ஐக் காட்டிக் கொண்டிருந்தது. தீபிகாவின் மனமோ கடிகார முள்ளைவிட வேமாக அடித்துக் கொண்டிருந்தது.

"இண்டைக்கு எட்டு மணி பஸ்ச விட்டா எத்தின மணிக்கு லெக்சசுக்குப் போறது. 9.30 மணிக்கு லெக்சசுக்குப் போக வேணுமே" என படபடத்தபடி அவசர அவசரமாக வெளியே செல்ல ஆயத்தமானாள் வினோ. வீதியை அடைந்தவளுக்கு ஆத்திரம் தலைக்கேறியது. முகம் சிவக்க உடனே வீட்டினுள்ளே திரும்பிவிட்டாள்.

"என்ன பிள்ள கம்பசுக்கு நேரம் போகுது எண்டு கத்திக் கொண்டு கிடந்தா இப்ப எண்ணடாண்டா போயிற்றுத் திரும்பி வாறா" தாய் கனகத்தின் கேள்வி அவளுக்கு ஆத்திரத்தைத்தான் கொண்டு வந்தது.

"அதான் அந்த சனியன் முன்னால நிக்குது. அது முகத்துல முளிச்சிற்று இண்டைக்குப் போனா போனமாதிரித்தான். என படபடத்தாள் வினோ.

வினோவின் பேச்சைக் கேட்டு வேதனை தாங்கமுடியாது உள்ளே ஓடிச் சென்றாா் அந்த இளம் விதவை குமுதா.

எத்தனை தடவை தான் சொல்றது. அந்த குமுதாவிற்கு ஆரும் வெளியில வெளிக்கிடேக்க முன்னால நிக்காத எண்டு. அவகேக்குற மாதிரி இல்ல. என முணுமுணுத்தபடி வெளியே சென்றாள் கனகம்.

நேரம் 8.15ஐக் காட்டியது.

வினோவிற்கு ஒரே ஆத்திரம். அந்த குமுதாவாலதான் இண்டைக்கு எட்டு மணி பஸ்ச விட்டன். இனி எத்தனை மணிக்கு பஸ்வருமோ என குமுதாவிற்கு காட்டிக் கொண்டே வீதியையும் மணிக்கூட்டையும் பார்த்தபடி நின்றாள் அவள்.

திடீரென்று அவளுக்கு ஓரே அதிசயம். சென்ற வாகனமெல்லாம் திரும்பி வந்து கொண்டிருந்தது. அதிசயித்து நின்றவளுக்கு அருகில் நின்ற முதியவரின் வார்த்தை ஞானம் தந்த போதிமரமாகியது.

இண்டைக்கு எங்க புள்ள போகப்போறா. தன்னா முனையில பிரச்சனை தெரியாதா. அதான் போன வாகனமெல்லாம் திரும்பி வருது. வழமையாப் போற எட்டு மணி பஸ்கூட அதில அகப்பட்டதாம். அதில போன சனத்தின்ட கதி என்னவோ? என பரிதாபப்படும் அந்த முதியவருக்கு நன்றி கூறத் தோன்றியது அவளுக்கு.

சீ என்ன அற்பப் பிராணி நான். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் அந்த அமுதாவிற்கு கதைத்து விட்டேன். இன்று அவள் மட்டும் என் முன்னால் நிற்காவிட்டால் நானும் தானே அகப்பட்டு இருப்பேன். முதலில் அந்த அமுதாவிற்கு நன்றி கூற வேண்டும் என நினைத்துக் கொண்டு வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள் அவள்.

## விதவை

பெண்ணே!
உன்னை விதவை என
அழைத்ததற்காக
விழிகலங்காதே!
உன்
நெற்றிப் பொட்டு தனை
நிலவாகவும்,
வர்ணச்சோலை தனை
வானமாகவும், கூந்தலப்பூ க்களை
நட்சத்திரங்களாகவும்
என
விதவிதமாய்
நீ
வைத்ததனாலேயே
உன்னை
'வித'வை என்றனர்
கண்னே!
கலங்காதே!!'

- கலாதரன் -

## மணமேடை நாயகருடன் மகத்தான விவாதம் ஒன்று

மணமாலை தனைத்தந்து
பணமாலையை
எதிர்பார்த்த ஏமாளிக்கோழைகளே
எழுச்சி பூ த்த இளைய எம்
பெண்களால்
இறுமாப்புக் கொண்ட வறிய உம்
உளத்திடம்
ஓர் சில கேள்வி

அன்னையின் கருவில் அமர்ந்த காலம்
நீயும் பத்து நானும் பத்து மாதம்
எழுதிப்படித்த எண்ணும் எழுத்துங்கூட
எனக்கும் உனக்கும் ஒன்று தான் அதில்
ஆண்கள் பெண்கள் என்ற அறிவிப்புத்
தெரியவில்லை.
ஆனாலும் - இருந்தென்ன மணமேடை
வரும் பொது மகத்தான
பிறவி நீ. அதில் மலிவான தகுதி நான்
இதில் தான் ஆண் என்ற அதிகாரமா?

இல்லை - நாம் பெண்களே என்ற
இளக்காரமா?

கேட்டுக்கொள் காலம் மாறுகிறது - அதில்
உங்கள் கோரத்தனம் தொலைகின்றது.
அச்சமும் நாணமும் அன்ன நடைப்
பெண்களும்
அடுப்பே சிறப்பென்ற இல்லத்தரசிகளும்
இடம் மாறிவிட்டனர்.
இலட்சியமும் மானமும் இறுகிய
நெஞ்சுந்தான்
எங்களிடையே இன்றைய சொத்து
பெண்மையின் சிறப்பை புரிந்து கொள் -அதில்
உங்களின் செருக்கை மாற்றிக் கொள்
உயர்வான உள்ளத்திற்கே இனி
எங்களிடம் சிறப்பு
இதை மறுப்போர்க்கெல்லாம் கிடைக்கும்
வெறுப்பு.

## பயணம் தொடரட்டும்!

உயிரினைப்படைக்கும்
உன்னால் –
உலகினைப்படைக்க
ஏன் முடியாது?
ஓ....பெண்ணினமே!
புதுயுகத்தினைப்படைத்து
புத்தெழிலாய்த் திழை!
இத்தரையில் உனது
அடிமை விலங்குகள்
அறுத்தெறியப்படும் வரை
அஞ்சாதே!

விடியலை நோக்கி
உன் பாதங்கள்
வெற்றி நடை போடட்டும்!
இடையினில் –
இருளான பாதையில்
உன் பாதங்கள்
மேடுகளையும், பள்ளங்களையும்
தாண்டும் போது
உனது உள்ளத்தில்
உறுதி பிறக்கட்டும்!

உறுதியோடு
உன் பயணம்
தொடரும் போது
மலையாய் வந்திடும்
மயக்கங்கள் கூட
பனியென மாறிப்
பக்குவம் தந்திடும்!

பெண்ணே!
சரித்திரங்களை
சற்றுப் புரட்டு!
சாதனைகள் எத்தனை என்பதை
உற்று நோக்கு!
உனது விழிகள் அப்போது
நெருப்பாகும்!
அடிமைத்தனத்தை அடியோடு
சுட்டெரி!
உனது –
ஆத்மாவுக்கு அப்போது
அமைதி கிடைக்கும்!
அதுவரை –
உனது பயணம்
உறுதியாய்த் தொடரட்டும்!

- பவானி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தாய்நில போராளி

கற்பை சூறையாடி
நரம்புச்சுட்டு
மனித சதைகொறித்து
நாய்களைப்போல்
சுட்டுத்தள்ளி
எனது தேசத்தைப் பிடித்தீர்கள்

வயல் பூ த்து கனி கனிந்து அழகாய்
சித்திரித்த
எனது தாய் நிலத்தை
குருதி சிவக்கச் செய்தீர்கள்

கூட்டுக்குள் இரைகோதி
தாகம் தீர்த்து
ஊடல் செய்த எனது
வீட்டை யெரித்தீர்கள்

முட்கம்பிகளால்
கைகளைக் கட்டி
கவசவாகனத்தில்
இழுத்துப் போனீர்கள்

கதறக் கதற
எரிடயரில் போட்டீர்கள்

சூறையாடப்பட்ட கற்பும்
கொழுத்தப்பட்ட
எனது சகோதரியின் எலும்பும்
கனன்று எரிகிறது
எனது நெஞ்சு வெடிப்பில்

இவைகளின் வழிகாட்டலில்
இன்று நானுமொரு
தாய்நிலப் போராளியாய்
தேசவிடுதலைக்கு.

- வி.சுதாகர் -

## ஒற்றுமை வேதம்

இலங்கைமக்களே.....!
ஒன்றுபடுங்கள்
ஒடுக்கப்பட்ட.....!
மறுக்கப்பட்ட.....!
கொள்ளையடிக்கப்பட்ட.....!
நமது
உயிர்களுக்காக.....!
உடமைகளுக்காக.....!
ஒற்றுமை வேண்டி
அணிதிரளுங்கள்.

வேண்டாம் நமக்குள்
அரசியல் வேறுபாடு
வேண்டும், எமக்கு
ஒற்றுமை விடிவு...!!

இனியும்
நாம் திரளாவிட்டால்
நம் நாடு
பிச்சை எடுக்க
வீதிக்கு வரும்
நம்
சமூகத்தின் கலாசாரம்
காற்றினில் பறக்கும்
இந்நாடே தடயம் இல்லாமல்
அழிக்கவும் படலாம்...!

இதற்காக
எதிர்க்குரல் கொடுப்பவர்களே....!!
நீங்களே
உங்கள் நெற்றியினில்
'துரோகிகள்' என்று
பச்சை குத்திக் கொள்ளுங்கள்.

நம்
சமூகத்தின்
அழிவிலும்.
இழிவிலும்.
வயிறு வளர்க்கும்
சில ஒட்டுண்ணிகளிடமிருந்து
நம்மைக் காத்துக்கொள்வோம்...!!!

பிறாஸ் எ.காசிம்.

## எப்போது வருவாய்

கட்டியங் கூறி
களிகொள்ளக்
காத்திருக்கும்
எம்மானிடர் முன்னே
சமாதானப்புறாவே
நீ
தரிசனம் கொடுக்காது
தலைமறைவாவதென்ன
குருதி தோய்ந்த
ஊன் உடல்களை
உண்டு உண்டு
உனக்கு இன்னும்
திருப்தி ஏற்படவில்லையா?
சிந்தனை செய்!
சேற்று வயல்களுக்குள்ளும்
காடுமலைகளுக்குள்ளும்
கஷ்டப்பட்ட காலங்கள்
மீண்டும் மீண்டும் வந்து
வேதனை தருவதில்
உனக்கென்ன
அவ்வளவு திருப்தி!
எங்கள்
ஆண்மை உணர்வுகள்
அபகரிக்கப்பட்டு
பெண்மைத் தன்மைகள்
பேயாக்கப்பட்ட அந்த
அக்கினி கால
சுடுகாட்டு விடியல்களை
இன்னுமேன் நீ
சொந்தம் கொள்ளுகிறாய்

க.அன்பழகன்

## இன்றைய மந்திரவாதி

ஓட்டுக்கள்
கேட்பதற்காக
பொதுமக்களின் மனதை
மயக்கும் மந்திரவாதி
பதவியில்
அமர்ந்த பின்
உதவி கேட்டுச்சென்றால்
திடீரென
மறைந்துவிடும்
தந்திரவாதி
சந்தர்ப்பசூழ் நிலைக்கேற்ப
பேசுகின்ற
சந்தர்ப்பவாதி
தனது தேவைகளை
பூர்த்தி
செய்வதற்காகவே
சேவைகள்
செய்கிறேன் என்று
சொல்லும்
சுயநலவாதி
இவைகளுக்கெல்லாம்
ஒருவன் அவனே
இன்றைய அரசியல்வாதி.

ந.துரைராசசிங்கம்
கோட்டைக்கல்லாறு-01

## உன் நினைவுகளில்

நினைவுகளே!
எனை நெருங்காதே
நின்மதி உறக்கம்
நான் கொள்ள
கனவுகளே எனைத்
தொடராதே.

காலத்தை மறந்து
உன் காலடியில்
விழுந்தேன் அன்று
காலத்தை நினைத்து
கண்ணீர்ப் புஷ்பங்கள்
என் காலடியில்
இன்று

பால் எனத்தான்
உனைத்தினமும்
பருகினேன்
போதை ஏற ஏறத்தான்
அதுபாலல்ல
கள்ளு எனப்
புரிந்தேன்

கண்ணுக்கு அழுகை
புதிதல்ல
ஆனால்
இந்தப் பெண்ணிற்கு
கண்ணீர் புதிது.
காவிரிக்கு
அணைகட்டினாலும்
என் கண்ணீருக்கு
அணைகட்ட
முடியாது.......

கண்ணீரை இறைத்து
இறைத்து
நான்
மரணப்பிடியில்
தவிக்கின்றேன்
என் கண்ணீரை
பன்னீராய் நினைத்து
நீ
உன்
வாழ்க்கைப் பயணத்தில்......

T.A. விமல்ராஜ்

## வாழ்த்துக்கள்

அண்மையில் (02-02-1998) இல்லற வாழ்வில் புகுந்த எமது இலக்கிய உலகு நண்பரும் நாடறிந்த கவிஞருமான கருணாகரன் லோறன்ஸ் (கவிஞர் வாசுதேவன்) ஜெனிற்றா சுதர்சினி இருதயம் மணமக்களை தினக்கதிர் இலக்கிய பகுதி சார்பாக வாழ்த்துகிறோம்.




## நூல் அறிமுக விழா

கவிஞர் சில்லையூா செல்வராசாவின் கவிதைகள் பகுதி1 நூல் அறிமுகவிழா அண்மையில் திருகோணமலையில் அமைதியாக நடந்தது.

கவிஞர் தாமரைத்தீவான் இதற்கு தலைமை தாங்கினார். கவிஞர் எஸ்.அருளானந்தம் விமர்சனவுரை நிகழ்த்தினார். நூல் வடிவமைப்பு, கவித்துவச் செறிவு என்பவற்றைப்பாராட்டியதுடன் மலிவுப்பதிப்பாக இந்நூலை எதிர்காலத்தில் கொணர்வதன் மூலம் சில்லையூரானின் கவிதைகள் எல்லாமக்களிடமும் பரப்பும் வகை செய்தல் வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கவிஞர்கள் செ.நவசோதிராசா, க.கோணேஸ்வரன், கெ.தர்மகுலராசா, ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர். நவசோதிராசாவின் உரையில் கவிதைச்சிறப்புக்கள் சுட்டிக்காட்டப்பட்டதுடன் அவரது குடும்பம் கலைக்குடும்பமாக அமைந்துள்ளமையையும் குறிப்பிடப்பட்டது. கோணேஸ்வரன் தனதுரையில் கவிஞர்கள் எவர்க்கும் வளைந்து கொடுக்காதவர்களாகவும் தான் கூறும் விடயத்தில் பற்றும் நம்பிக்கையும் கொண்டவர்களாகவும் "கர்வம்" நிறைந்தவர்களாகவும் இருக்கவேண்டும் என்றார். தர்மகுலராசா உரையாற்றும்போது கவிஞர்கள் தன்திறமையில் நம்பிக்கை வைப்பதுபோல் ஏனைய கவிஞர்களது திறமையிலும் கவித்துவத்திலும் நம்பிக்கை கொண்டு மதிக்கவும் பாராட்டவும் பழக வேண்டும். இந்தப் பண்புகள் சில்லையூரானிடம் தாராளமாக இருந்தன என்று கூறினார்.

பதிலுரை கமலினி செல்வராசனினால் நிகழ்த்தப்பட்டது. தனது கணவரின் உயர்ந்த பண்பு, விருந்தோம்பல் என்பவற்றை உள்ளம் நெகிழக்கூறியஅவர் "கர்வம்" நிறைந்த ஒரு மனிதராக சில்லையூரான் வாழ்ந்து காட்டினார் என்று கூறி சில சம்பவங்களை விபரித்தார். தனது வீட்டில் வருடக்கணக்காக உடனிருந்து நன்மை பெற்ற பலர் இப்போது நடந்து கொள்ளும் முறை பற்றியும் கவலைப்பட்டார். தனது கணவனின் ஆக்கமொன்றை தனது ஆக்கம் என்று தன் கணவனிடமே வாய்கூசாமல் கூறிய ஒரு நபரையும் நினைவுபடுத்தினார். சில்லையூரான் பற்றி அவர் பலறறியாத விடயமொன்றையும் கூறினார். சில்லையூரான் திருகோணமலை என்பதே அது.

மிகவும் அடக்கமாகவும் தெளிவாகவும், சட்டத்தரணி கா.சிவபாலனால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந் நிகழ்வில் புத்திஜீவிகள், கல்விமான்கள், இலக்கியக்காரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

-சரோஜினி-




வெளியீடு:
ஈழத்து இலக்கியச்சோலை
விலை: 45 ரூபா

திருகோணமலை மண்ணின் இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டு அதனை பேணிக்காத்து வருவதில் ஈழத்து இலக்கியச் சோலைக்கும் பெரும் பங்குண்டு. இதுவரை ஆறுவெளியீடுகளை பல்துறைகளிலும் வெளியிட்ட இலக்கியச்சோலை தனது 7வது வெளியீடாக கங்கைக்காவியத்தை வெளிக்கொணர்ந்துள்ளது. கங்கைக்காவியம் திருகோணமலை மண்ணின் மூதூர் பிரதேசத்தில் காலகாலமாக வாய்மொழி இலக்கியமாக பாடப்பட்டு வந்த பாடல்களின் தொகுப்பாகும்.

இன்றும் போலவே அன்றும் ஈழத்து இலக்கியத்திற்கு முஸ்லிம் பெருமக்கள் செய்த பங்களிப்பு பெருமைக்குரியது.

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களான புலவர் தலைவர் என்று அழைக்கப்படும் முஹையத்தீனின் "கங்கைக்காவியம்" மூதூர் உமறு நெய்னாப் புலவரின் "புகாரிக்காவியம்" தோப்பூர் குப்பைத் தம்பிப் புலவரின் "குறுஞ்சாமுனைக்காவியம்" என்ற மூன்று குறுங் காவியங்கள் தமிழன்னையின் முடிக்கு அலங்காரமாக "கங்கைக்காவிய"மாக மலர்ந்துள்ளது.

புலவர் தலைவர் தனது காவியத்தில் "மகாவலி கங்கை மூதூருக்கு வளத்தையும் வனப்பையும் தருகின்றது. அக்கங்கையானது ஓடி வளர்ந்து திரும்பும் இடங்களில் எல்லாம் வெண் மணலைக் கொட்டிப் பரவியிருக்கும். அம் மணற்திட்டுக்களைத் தனது துணைவியாருக்கு காண்பித்து விளக்குவதாக இக்காவியம் அமைந்துள்ளது.

"சீராறு மகாவலி
கங்கையின் வியப்பும்
நெத்திகள் அமைந்தி
ருக்கும் விஸ்தார விதமும்
நேரான காவியம்
நாவால் இசைக்க
நித்தனே என்னாவில்
வெற்றி தருவாயே"

என்று ஆரம்பிக்கும் காவியம் மகாவலி நதியின் இயற்கை வனப்புக்களை அள்ளித் தெளித்து கவிதையாக்குகிறது.

தோப்பூர் கிராமத்தின் முதல் புலவரான குப்பைத் தம்பிப் புலவர் நாட்டு வைத்தியத்தில் கைதேர்ந்தவர். வைத்தியம் தொடர்பாகவும் பல பாடல்களைப் பாடியுள்ளார். இளமையில் இயல்பாக கவித்துவ ஆற்றல் கொண்டவர். 1908ம் ஆண்டு குறிஞ்சாமுனைக் காவியத்தைப் பாடினார்.

தோப்பூருக்கு பக்கத்திலுள்ள அல்லைக்குளம் சார்ந்த மருதநிலப் பகுதியும் விபரிக்கப்படுகின்ற குறிஞ்சா முனைக் காவியத்தில் அக்குளக்கரைக்குப் பக்கத்தில் விருந்தயரும் சம்பவமே காவியப்பொருளாகும்.

"ஆதியுன்னருள் தங்கு
தோப்பூரில் வாலிபர்கள்
ஆயிதிலே விருள்
தானது கள் செய்த
சேதிகளை யானுமொரு
பாவினை இசைக்க
தீதாறு காரணம் தான
இறையருள்வாய்!
என்று தொடங்கி
மங்கையரும் வாழி. நல்
மணமோர்கள் வாழி
வகுதை நகர்
முகையதீன் ஆண்டகையும்
வாழி
கங்கை செறி தோப்பூர்
நகர்ப்பள்ளி வாழி
தவறாமலே செந்நெல்
பெருகிடவும் ஆமென்!

என்று இறைவணக்கத்துடன் முடிகிறது குறிஞ்சாமுனைக்காவியம்.

இஸ்லாமிய இலக்கியத்தின் முதற்காப்பியமான சீறாப்புராணத்தை பாடிய உமறுப் புலவரை தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும். ஆனால் அதே உமறுப்புலவரின் பெயரைத் தரித்துக்கொண்டு மூதூரிலும் ஒரு புலவர் இருந்தார். அவர் தான் உமறுநெய்னாப் புலவர்.

மூதூர் நத்வத்துல் உலமா தேன்றிய சரித்திரத்தை அந்தாதியாகவும் சில அடிகளில் பாடியுள்ளார் புலவர்.

சீர்தங்கு முலகு முதல்
யாவையும் படைத்து
செப்பு முத்தெழில்
புரியும் ஆதிறகுமானே
பேரிதங்கு காவியமான
தினிதோதப்
பொாியவாதுணை
நின்றுன் அருள்புரிவாயே!

என்று ஆரம்பிக்கிறது புலவரின் காவியம்.

காவிய நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ள மாண்புமிகு எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் தமதுரையில்

"முன்னொரு காலத்தில் மேதாவிகள் மத்தியில் பெரும் விமர்சனத்துக்குட்பட்டிருந்த "கலை கலைக்காக அல்ல. கலை மக்களுக்காகவே" என்ற கருத்தை இன்று இலக்கிய உலகு சர்வசாதாரணமாக ஏற்றுக் கொண்டுள்ளது. எமது எவ்விதக் கலைப்படைப்பும் மக்களைச் சென்றடையும் வகையில் அமைதல் வேண்டும். இல்லையேல் பண்டிதர்களும் உயர்கல்வி கற்றோருமாக இருக்கின்ற மிகச்சிறிய தொகையினருக்கே அவை சென்றடையும். இதனால் சமூகம் எவ்விதப் பயனையும் அடையப்போவதில்லை. இக்காரணங்களால் தான் இன்றைய காலகட்டத்தில் தமிழ் கூறும் நல்லுலகின் மன்னாதி மன்னனாக மக்கள் தமிழ் முடி தரிக்க முடிந்திருக்கிறது" என்கிறார்.

கங்கைக்காவியத்தை மூதூர் மைந்தன் அ.ச.உபைதுல்லா அவர்கள் தொகுத்துள்ளார். பழம்பெரும் காவியத்தை தேடிப் பிடித்து பதிப்பிற்கும் ஈழத்து இலக்கியச் சோலையும் அதன் ஸ்தாபகரும் காப்பாளருமான திரு.த.சித்தி அமரசிங்கம் அவர்கள் பாராட்டப்படவேண்டியவரே. காலம் ஒரு நாள் அவரது கலைப்பணியை போற்றும் என்ற நம்பிக்கை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டீன் ஏஜ் ஸ்பெஷல்

— ஹேஜேந்தினி

# அதிசயமான 6 வது அறிவு

ஜீவராசிகளில் மனிதன் ஒருவன் மட்டும்தான் ஆறு அறிவு படைத்தவன் என்று நமது தமிழ் நூல்கள் கூறுகின்றன. இப்போது அந்த ஆறாவது அறிவைப் பற்றிய அதியசமான விஞ்ஞான உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நீங்கள் புதிதாக ஒரு நபரை பார்க்கிறீர்கள். பார்த்த மாத்திரத்தில் அவர் உங்கள் மனதுக்கு மிகவும் பிடித்தவராகத் தோன்றலாம். அதேபோல் சிலரை முதன் முறையாக பார்க்கும் போதே இவர் சரிப்படமாட்டர், என்று ஒரு உள்ளுணர்வு எச்சரிக்கை செய்யும். அல்லது ஆத்மார்த்தமாக ஒரு நண்பரைப் பற்றி அடிக்கடி சிந்தனை செய்து கொண்டிருப்போம். திடீரென்று எதிர்பாராமல் அவரிடமிருந்து ஒரு கடிதம் வரலாம். அல்லது அவரே நேரில் உங்களைப் பார்க்க வரலாம். இவைகள எல்லாம் தற்செயலான (Coincide) நிகழ்ச்சிகள் என்று நாம் அசிரத்தையாக விட்டு விடுகிறோம். ஆனால் இப்படிப்பட்ட அறிவுறுத்தல்கள்தான் உங்களிடம் உள்ள ஆறாவது அறிவை உங்களுக்கு சுட்டிக்காட்டுகிறது. என்று அர்த்தம் என்று பல ஆராச்சிகள் நிரூபிக்கின்றன. இந்த ஆறாவது அறிவையும் முறைப்படி வளர்க்க ஆரம்பித்தால் எண்ணிப்பார்க்க முடியாத அதிசயங்கள் நிகழும் என்று ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு சின்ன உதாரணத்துக்கு வருவோம். உங்களிடம் ஒரு சைக்கிள் தான் உபயோகத்திற்கு இருக்கிறது. என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் ஒரு 'கார்' வாங்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள்.

இதெல்லாம் வெறும் கற்பனைகள் என்று ஒதுக்கிவிட வேண்டும் என்று அவசியமில்லை.

முதல் வேலையாக நீங்கள் வாங்க நினைக்கும் காரின் படத்தை ஏதாவது ஒரு பத்திரிகையில் இருந்து வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். அந்தக் காருக்கு அருகில் நீங்கள் நிற்பது போல் உங்கள் போட்டோவை வெட்டி ஒட்டிக் கொள்ளுங்கள். அந்தக்கார் உங்களுக்கு சொந்தமானது என்று தீவிரமாக நம்புங்கள். அதற்குப் பிறகு அந்தக காரை உடனடியாக வாங்க எந்த பேங்கில் லோன் தருவார்கள் என்று விசாரியுங்கள். எந்த பேங்க் பணம் தருகிறதோ இல்லையோ, அந்த பேங்கிற்கு ஒரு விண்ணப்பம் முறைப்படி எழுதுங்கள். அதை, பேங்கிற்கு அனுப்ப வேண்டியது இல்லை.

இப்படி ஒரு கார் வாங்க வேண்டுமென்றால், நீங்கள் எப்பேர்ப்பட்ட பிசினஸ் செய்ய வேண்டும் என்று யோசித்து ஒரு திட்டம் தீட்டுங்கள்.

இப்படி பிசினஸ் ஆரம்பிக்க யாரை பார்ட்னராக சேர்க்கலாம் அல்லது முதலீடு செய்ய வழி என்று உண்மையாக ஒரு பேப்பரில் எழுதுங்கள்.

இதெல்லாம் ஆரம்பத்தில் பைத்தியகாரத்தனமாகவே படலாம். ஆனால் அப்படி செய்து பாருங்கள் எதிர்பாராத இடங்களிலிருந்து சாதகமான வழிகள் ஒவ்வொன்றாக நிச்சயம் வந்து சேரும் என்று ஆராச்சியாளர்கள் அடித்துக்கூறுகிறார்கள். உடல் வலிமையை விட மன வலிமை மகத்தானது' என்று எல்லோரும் ஒப்புக் கொண்ட விசயந் தான். இப்படி உங்கள் விருப்பில் எதுவானாலும் அதை மேலே கொடுத்த உதாரணம் போல் படமாக எழுத்தாக எழுதிப்பாருங்கள்.

*என்னதான் நடக்கிறது என்று பார்ப் போமே.......!*

### Sixth Sense

ஆறே மாதத்தில் நீங்கள் கார் வாங்க வேண்டுமா? முதலில் உங்கள் போட்டோவை வெள்ளையாக உள்ள பகுதியில் ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள்



இவைகளையெல்லாம் அடிக்கடி எடுத்துப்பார்த்துக் கொள்ளுங்கள் இவைகள் மற்றவர்கள் பார்வையில் படாமல் ரகசியமாக இருப்பது நல்லதாம்.

## *தல்.... தல்.....தல்.......காதல்!*

காதல் கலாசாரத்தில் ரோஜாக்கள் பறித்துத் தருவதும் பரிசுகள் பரிமாறிக் கொள்வதும் எப்போதும் இருப்பதுதான்!

பெப்ரவரி பதினான்கு VELENTINE'S DAY என்ற இந்த நாள் காதலர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தினம். சர்வதேசத்திலும் காதலர்கள் தங்களுக்குள் காதல் கவிதைகளைக் கைமாற்றிக் கொள்கிற காலம். வலன்டைன்ஸ் என்றால் காதல் கவிதைகள் என்று அர்த்தம். இந்த ஒருநாள்.... காதலின் திருநாள்!

தமிழ் கூறும் நல்லுலகில் காதலர்களே..... நீங்கள் ரோஜாப் பூக்களைப் பறிப்பதற்கு முன் இந்தக் கவிதையைப் பாடுங்கள்.

என்னிடம் பரிசுப் பொருளாக  
ஒரு  
ரோஜாவைக் கேட்கிறது உன்  
மௌனம்

ஆனால், உன்னைக் காதலிக்க  
ஆரம்பித்த போதே  
பூக்களையும் ரசிக்க  
ஆரம்பித்துவிட்டது மனசு  
எப்படிப் பறிப்பேன்



ஒரு ரோஜாவை

*சங்கர்.*


### படைப்பாளிகளே......!

தினக்கதிர் வார வெளியீட்டிற்கு தங்களிடமிருந்து தரமான படைப்புக்களை எதிர்பார்க்கின்றோம். சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், அரசியல் ஆய்வுகள், இலக்கிய விமர்சனங்கள், மற்றும் தொடர்கதைகள், போன்றவற்றை எழுதுங்கள்

எழுதியதை தினக்கதிருக்கு  
தபாலிடுங்கள்.


# முத்தக்காட்சியில் நடிப்பதில் தவறில்லை.

–மந்த்ரா –



மந்த்ரா, ஸ்ரீதேவி, மீனா, வழியில் வந்தவர்தான். ஆம் இவரும் குழந்தை நட்சத்திரமாக பல படங்களில் விஜயா என்ற பெயரில் நடித்தவர்.. கதாநாயகியாக ஒரு தெலுங்குப் படத்தில் அறிமுகமானார். அது எதிர்பார்த்த வெற்றியைத் தராதபோது ஒரு எண்கணித மேதையின் அறிவுரைப் படி மந்த்ரா என்று பெயரை மாற்றிக் கொண்டார். அந்தப் பெயரில் என்ன மந்திரம் இருந்ததோ தமிழ்த்திரையுலகில் பிஸியாகி விட்டார். அருண் குமாருடன் நடித்த "பிரியம்" வெற்றி பெறாவிட்டாலும் மந்த்ரா மீது பலரது பார்வைபட்டது. அவர் காட்டிய கவர்ச்சி குழந்தைத் தனமான பார்வை, வசீகரமான சிரிப்பு, இளைஞர்களை அவர் மீது காதல் கொள்ள வைத்தது. பிரபு போன்ற பெரிய நட்சத்திரங்களுடன் நடிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியது. வடக்கில் இருந்து வாய்ப்புக்கள் தேடிவந்தன. தெலுங்கில் அவர் "ராசி" என்ற பெயரில் நடித்த "சுபகாஞ்சலு" (பூவே உனக்காக) கோகுல சீதா (கோகுலத்தில் சீதை) ஆகிய படங்கள் 100 நாட்களுக்கு மேல் ஓடியதில் அங்கும் ராசியானார்.

மந்த்ராவிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள்

1) உங்கள் பெயரை அடிக்கடி மாற்றிக் கொள்வது குழப்பம உண்டாக்காதா?

நான் அப்படி நினைக்கவில்லை. தமிழ், இந்தியில் நான் மந்த்ராதான். தெலுங்கு ரசிகர்களுக்கு ராசியாகத்தான் என்னைத் தெரியும். இதில் என்ன குழப்பம்?"

2) தமிழில் நீங்கள் நடித்த "ப்ரியம்", "கங்காகௌரி", "பெரிய இடத்து மாப்பிள்ளை", "தேடினேன் வந்தது", "லவ்ருடே", ஆகிய படங்களில் "லவ்ருடே" தவிர மற்றவை அதிக வரவேற்பு பெறவில்லை. இதனால் உங்களுக்குப் பாதிப்பு உண்டா?

இந்த எல்லாப்படங்களிலும் நான் நடித்ததற்கு சந்தோஷப்படுகிறேன். ஒவ்வொன்றும் சுவையான வித்தியாசமான கதைகள். என் நடிப்பு எல்லாவற்றிலும் பாராட்டப்பட்டது. அதுவே என் வாய்ப்புக்களை கூட்டுகிறது. அதிலும் எல்லாப் படங்களுமே படுதோல்வி அல்ல. ஓரளவு நன்றாக ஓடிய படங்கள் தான.

3) தற்போது நடித்து வரும் படங்கள்?

அர்ஜுனுடன் "கொண்டாட்டம்", "சத்யராஜுடன் கற்புக்கரசன், பார்த்திபனுடன் "விவரமான ஆளு", விக்னேசுடன் "புதுக் குடித்தனம்" மற்றும் பல படங்கள் பேச்சு வார்த்தையில் இருக்கின்றன.

4) மிதுனுடன் நடிக்கும் இந்திப்பட வாய்ப்பு எப்படிக் கிடைத்தது?

ஆறுவருடங்களுக்கு முன் மிதுனுடன் அவர் மகளாக "ராவன்ராஜ்" படத்தில் நடித்தேன். இப்போது கதாநாயகியாக நான் வளர்ந்ததை பார்த்த பிறகு 2 படங்களுக்கு சிபார்சு செய்தார். "ஞரத்", "ராங்பாஸ்" படங்களில் நடிக்கிறேன். அவருடைய மகளாக நடித்த நான் இன்று ஜோடியாக நடிப்பதை நினைத்தால் திரில்லாக இருக்கிறது.

5) இந்தியில் மேலும் ஏதாவது வாய்ப்புக்கள்?

"தமிழ் தெலுங்கு இரண்டிலும் பிஸி. தற்போது கன்னடத்திலும் வாய்ப்புக்கள் வர ஆரம்பித்திருக்கின்றன. கால்ஷீட் பிரச்சனையால் ஏற்கமுடியவில்லை".

6) நாயகி அறிமுகமான தெலுங்குப் படத்திற்கு இரண்டு மானில விருதுகள் கிடைத்திருந்தும் பெரிய அளவில் மக்களிடையே வெற்றி பெறாதது உங்களுக்கு upset ஆக இருந்ததா?

அந்த அளவுக்கு நல்ல கதை உள்ள படம் வெற்றி பெறாதது ஏமர்ற்றமாகத்தான் இருந்தது. எனக்கு அந்தப் படத்தில் குறிப்பிடும் படியான வேடம் இல்லாததால் அதிக வருத்தமில்லை. நான் நடித்திருந்த படத்திற்கு விருதுகள் கிடைத்தது பெருமைதான்.

7) தமிழில் உங்களை கவர்ச்சி காட்டும் நடிகையாகவே வெளிப் படுத்திக் கொண்டு வருவது ஏன்?

அது உண்மை அல்ல. ப்ரியம் படத்திலிருந்தே எனக்கு நல்ல வேடங்கள் தான் கிடைத்து வருகின்றன. ப்ரியம் படத்தில் நான் நன்றாக நடித்ததற்கு எத்தனையோ காட்சிகளை சொல்லலாம். "தேடினேன் வந்தது" படத்தில் நான் நீச்சல் உடையில் நடித்ததைப் பார்த்து நான் கவர்ச்சியான வேடங்களுக்கு என்ற எண்ணம் வந்திருக்கின்றது. எனக்கு நீச்சல் நன்றாகத் தெரியும். நீச்சல்குளத்தில் காட்சி என்கிறபோது அந்தமாதிரி உடையில் வராமல் எப்படிவருவார்கள்? நடிப்புத் துறைக்கு வந்த பிறகு முத்தக்காட்சியில் நடிக்கச் சொன்னாலும் நடிக்கத்தான் வேண்டும். அது விரசமாக போகாமல் பார்த்துக் கொண்டால் அதில் என்னதப்பு.

காதல் கதைகளிலேயே நடிக்கிறீர்கள்? அது உங்கள் நிஜவாழ்க்கையில் எந்த அளவு பாதிப்பு ஏற்படுகிறது.?

நான் செய்யும் வேடத்தை வீட்டுக்கு எடுத்துச்



சிம்ரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக
ிதனால்
ர்டா?
நான்
கிறேன்.
யாசமான
வற்றிலும்
வாய்ப்
எல்லாப்
. ஓரளவு

படங்

"சத்ய
திபனுடன்
ன் "புதுக்
ள் பேச்சு

ந்திப்பட
?
டன் அவர்
டித்தேன்.
ளர்ந்ததை

ல்லமாட்டேன். என் வயதுக்கு தக்கபடி
தல் கதைகளில் நடிக்கிறேன்.
க்...பைக் க...த்தவுடன் நான் நானாகி
... நிஜவ... கையில் காதலைப்பற்றி
திக்கவே நேரமில்லை. திரையுலகில்
னை ஓர் நிலையான இடத்தில் நிறுத்திக்
ாள்வது எப்படி என்பதைப் பற்றியே
திக்கிறேன். ஸ்ரீதேவி போல் நல்ல நடிகை
று பெயர் பெறவே விரும்புகிறேன். அதிக
லங்கள் இந்த திரையுலகின்
ளிச்சத்தில் இருக்க வேண்டும் என்று
நிறுத்தினார் மந்த்ரா.......!

## சினி நியூஸ்

### ஆஹா ரஜீவ் கிருஷ்ணா

ாடலிங்கில் இருந்து வெள்ளித்திரைக்கு
ப்பாஸைத் தொடர்ந்து வந்திருக்கும்
ியவரவு ரஜீவ் கிருஷ்ணா. (நமது நாட்டு
வாஹினியில் ஞாயிறுதோறும் ஒளி
பாகும் "ரேவதி" தொடரில் ஹரி என்னும்
யரில் நடிப்பவர்) ஆஹா படத்தில்
ிச்சயமானாலும் ஏற்கனவே இவர்
...ாகம்" ...தில் ஸ்ரீதேவியின்
வராக ஒரு குணச்சித்திர வேடத்தில்
த்துள்ளார். இவர் பெங்களூரில்
ஜினியரிங் கல்லூரியில் படித்தவராம்.
ஜீத்குமார் இவருடைய நண்பராம்.

### சங்கீத வாரிசு

ன்னிசைத்தென்றல் தேவாவின் மகள்
கீதா "காதலே நிம்மதி" என்ற படத்தின்
லம் பின்னணிப்பாடகியாக அறிமுகமா
ார். "சினிமாவில் பாடுவது பற்றி நான்
பனை கூட செய்து பார்க்கவில்லை.
பா இசையமைப்பாளராக இருந்தும் ஒரு
ள் கூட ரெக்கோடிங் தியேட்டர் பக்கம்
ானது கிடையாது. அப்பாவே என்னிடம்
டும்படி கேட்டபோது மறுக்கமுடியவில்லை.
ரணம் நானே அப்பாவின் முதல் ரசிகை"
ன்று கூறுகிறார் தேனிசைத்தென்றலின்
கீத வாரிசு.

### புதிய வாரிசு

ண்டிச்சக்கரம்", "ரோசாப்பூ ரவிக்கைக்
ரி", "விடிஞ்சாக்கல்யாணம்" போன்ற பல
வற்றிப்படங்களைத் தயாரித்த விவே





# சினிமா உலகம்



அப்பாஸ்

கானந்தா பிக்சர்ஸ் அதிபர் திருப்பூர் மணி அவர்கள் தனது மகன் விவேகானந் கதா நாயகனாக அறிமுகமாகும் புதிய படம் ஒன்றைத் தயாரிக்கிறார். "லவ்ருடே" பாலசேகரம் டைரக்ட் செய்யும் இந்தப் படத்தில் சிம்ரான் நாயகியாக நடிக்க, மணிவண்ணன், ரகுவரன், பிரகாஷ்ராஜ், செந்தில், அஜய்ரத்னம் இன்னும் பலர் நடிக்கின்றனர். தேவா இசையமைக்கிறார்.

### புதுமுகம் மஞ்சரி

கார்த்திக் நடித்த கிழக்கு முகம் படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடித்தவர் மஞ்சரி. (புதுமுகம்) இந்தப் படம் சரியாகப் போகாததால்அடுத்த வாய்ப்புக்கு காத்திருந்த மஞ்சரிக்கு "குழந்தை" என்ற படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இளவரசன் இயக்கும் பாடல்களே இல்லாத இந்தக் கிரைம் படம் தனக்கு ஒரு பிரேக்கைத் தரும் என்கிறார் தமிழும் பேசத் தெரிந்த மஞ்சரி. நல்ல முகவெட்டும், வாளிப்பான உடலமைப்பு, நடனப்பயிற்சி இவை அனைத்தையும் பெற்றிருக்கும் மஞ்சரி எந்த வேடம் கொடுத்தாலும் ஏற்று நடிக்கத்தயார்.

### நக்மாவின் நெக்ஸ்ட்

தமிழ்ப்படங்களுக்கு இப்போது அதிகம் கால்ஷீட் கொடுப்பதில்லையே ஏன் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறீகளா என்று கேட்டதற்கு No marriage now. இப்போது வேட்டிய மடிச்சுக்கட்டு தமிழ், இந்தி ஆகிய இரு மொழிகளிலும் நடித்துக்கொண்டிருக்கிறேன். இது முடிந்ததும் சூப்பர் குட் படம் ஈரோடு சௌந்தர் டைரக்ட் செய்கிறார். டைட்டில் சிம்மராசி ஹீரோ யார் தெரியுமோ சூப்பர் ஹீரோ சரத்குமார் தான்.

### சொர்ணமுகி

தமிழக அரசின் விருதைப்பெற்ற "தொட்டாச்சிணுங்கி படத்தையடுத்து கே.எஸ் அதியமான் கதைவசனமெழுதி இயக்கும் "சொர்ணமுகி" டைட்டிலைப்பார்த்தவுடன் "சலங்கைஒலி" டைப்பில் நாட்டியப்பின்னனி கொண்ட சப்ஜெக்டாக இருக்குமோ என்றுகேட்டால் நிஜம் தான். ஆனால் முழுக்க முழுக்க நாட்டியமோ சங்கீதமோ இருக்காது. டைட்டில் ரோலில் தேவயாணி நடிக்கிறார்.



விஜய்க்கு இனிதாய் பிறந்திருக்கின்ற புத்தாண்டு இது. கடந்த 1997ம் ஆண்டு பல வகைகளில் தமிழ் சினிமாவை பின்னடைவுக்குத் தள்ளிற்று. இந்தப் பின்னடைவுகளை மீறி எழுந்து நின்று வெற்றிகளைக்குவித்தவர் சிறந்த நடிகர் என்று பட்டி தொட்டி எங்கும் பாராட்டப் பட்டவர் விஜய்.

விஜயிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள்

**1) உங்களுக்கான இணை யார் என்று நினைக்கிறீர்கள்?**

"அந்த விஷயத்தில் நான் தலையிடுவதில்லை."

**2) என் படங்கள் நன்றாக ஓடுவது சிறந்த கதைக்காகத்தான் என்று நீங்கள் சொல்வது உங்களை நீங்களே ஓரங்கட்டுவதாகாதா?**

என் படம் மட்டுமல்ல எந்தப் படம் வெற்றியடைந்தாலும் அதில் கதைதான் ஹீரோ.

**3) பூவே உனக்காக, லவ்ருடே, ஒன்ஸ்மோர், நேருக்குநேர் படங்களின் தொடர்ச்சியான வெற்றியில் விஜய் நடிக்காவிட்டால் அந்த வரவேற்பு கிடைத்திருக்காது. நீங்கள் சிறந்த நடிப்பை வழங்காமல் வெற்றி சாத்தியமில்லையே?**

"அந்தக் கதாபாத்திரங்களின் தேவையை நான் பூர்த்தி செய்திருக்கலாம். அந்த தேவையை கதையும் இயக்குனரும் தானே உண்டு பண்ணியிருக்கிறார்கள். நான் இல்லாமல் வேறு கதாநாயகர்கள் நடித்திருந்தாலும் இந்த வெற்றி சாத்தியமே.

**4) நேருக்கு நேர் குறித்து பல்வேறு பேச்சு எழுந்ததே....?**



நடிப்புலக மாமேதை "செவாலியர்" சிவாஜிகணேசன் இலங்கை வந்திருந்த போது தினக்கதிருக்கு அளித்த பிரத்தியேக போஸ்- படப்பிடிப்பு எமது நிந்தவூர் நிருபர் ஏ.எல்.எம்.சலீம்.





விநோதினி

## சூப்பர் ஸ்டார் - 1997,1998 விஜய்



விஜய்-சங்கவி

"நேருக்கு நேர்" படத்தைப்பார்த்துவிட்டுத் திரும்பியபோது (as a movie) எனக்குப் பிடித்திருந்தது. பட வெளி யீட்டுக்குப்பின்பு விளம்பரங்கள் குறித்த சர்ச்சையைக் கூட நான் பெரிய மனதுடன் எதிர் கொண்டேன். மணிரத்னம் அவர் களுடன் பணிபுரிய விரும்பியே அவரது தயாரிப்பு நிறுவனத்தில் நடிக்க நான் ஒப்புக் கொண்டேன். அது நான் மிகவும் எதிர் பார்த்த படம். என்னை யாரும் ஏமாற்ற வில்லை. ஆனால் ரசிகர்களும், என்னுடைய நலத்தை விரும்பும் நல்ல நெஞ்சங்களும் படம் பார்த்துவிட்டு தங்கள் வருத்தத்தை

வெளிப்படையாகவே தொடர்ந்து சொல்லச் சொல்ல என்னுடைய கண்ணோட்டம் தவறு என்று நான் உணரத்தொடங்கினேன். என்னைத் தவிர வேறுயாருக்கும் படம் பிடிக்கவில்லை. அவங்க தீர்ப்பு தானே முக்கியம். படம் சென்னை போன்ற சில நகரங்களில் ஓடியதே தவிர பரவலாக பெரிய வெற்றி பெறவில்லை.

**5) மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஆண்டு தோறும் நூறு அரிசி மூட்டைகள் வழங்குவது மக்களின் அபிமானம் பெறவா...?**

"கஷ்டத்தில் இருக்கிற மக்களுக்கு உதவுவதன் மூலம் அவங்களது நல்வாழ்த்துக்கள் நம்மை நல்லபடியாய் வாழவைக்கும் என்று அப்பா அடிக்கடி சொல்வார். எனக்கு விளம்பரம் தேவையில்லை. ஏழைகள் வயிறு குளிர என்னால் முடிந்த சிறு உதவி அதுவே.

**6)டைரக்டராவீர்கள் என்று எதிர் பார்த்தால் தயாரிப்பாளராகி விட்டீர்களே?**

நான் இயக்குனராக இன்னும் ஐந்து, ஆறு ஆண்டுகள் பிடிக்கும் நிலாவே வா கதையை கேட்டதும் அதை நானே தயாரிக்கவேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று. லவ்சப்ஜெக்ட்வித் நல்ல மெசேஜ். இன்றைக்கு நல்ல படங்களுக்கு ஆதரவு இருக்கிறது. இந்த டிரெண்டிற்கு ஏத்தமாதிரி படம் தயாரித்து வெற்றி பெற வேண்டும். என் முதல் தயாரிப்பை கே.டி.குஞ்சுமோன் ரிலீஸ் செய்வது பெருமையாய் இருக்கிறது.

**7) எல்லாப்படங்களிலும் பாட விரும்புவீர்களா?**

என்னுடைய குரலுக்கு ஏத்தமாதிரி ரியூன் இருந்து இசையமைப்பாளர் விரும்பினால் பாடுவேன்.

**8) தேசிய விருதை எதிர்பார்த்து படம் தயாரித்து நடிப்பீர்களா?**

தேசிய விருது பற்றியெல்லாம் நான் இன்னும் சிந்திக்கவேயில்லை. நான் நடிக்கும் படத்தின் கதை அம்சத்தில் ஏதாவது ஒன்று என்னைப்பாதித்தாலும் நான் நடிக்க ஆசைப்படுவேன்.

**9)சிவாஜியுடன் அத்தனை அன்னியோன்யமாய் எப்படி நடிக்க முடிந்தது?**

அது நிஜத்தில் சிவாஜி அவர்கள் என்னிடம் காட்டிய அன்பும் அன்னியோன்யமும் படத்திலும் வாழ்ந்து காட்டிற்று. சிவாஜிசார் ஒன்ஸ்மோர் படத்திற்காக ஒரு முழு இளைஞனாக தன்னை மாற்றிக் கொண்டார்.

**10) நிஜவாழ்வில் பூபோன்ற மென்மையான இயல்புடையவராய் காணப்படும் நீங்கள் ஒரு ஆக்ஷன் ஹீரோவாய் பிஅன்ட்சியை கவர்ந்திழுப்பது எப்படி?**

இரண்டுக்கும் காரணம் அப்பாதான். என் வாழ்க்கையின் இயக்குனர் அவர். என் படம் பற்றிய முதல் கருத்தை அவர் சொல்லிக் கேட்கவே நான் விரும்புவேன். ரசிகர்களின் தீர்ப்பு எப்படி அமையும் என்பதை அப்பாவின் கருத்தில் இருந்தே நான் அறிந்து கொள்வேன். இதுவரை ஆறுபடங்களில் அப்பா என்னை இயக்கி இருக்கிறார். 1998ன் டிசம்பரில் நாங்கள் இணையும் ஏழாவது படம் வெளிவரும்.

**11) 1997ல் நீங்கள் முன்னனியில் இருக்கிறீர்கள். 1998ல் இன்னொரு கதாநாயகர் முன்னனிக்கு வந்தால் உங்கள் நிலையை எப்படி எடுத்துக் கொள்வீர்கள்.?**

"என்க்குப் பயமும் கிடையாது. பொறாமையும் கிடையாது. போட்டி இருக்கலாம். பொறாமை கூடாது. பொறாமை இருப்பின் என் இருப்பு பெருமையாக இருக்காது. எல்லா கதாநாயகர்களையும் எனக்குப் பிடிக்கும். எல்லோருடனும் நடிக்கவே நான் விரும்புகிறேன். இரு இரண்டு கதாநாயகர்கள் சப்ஜெக்டில் நான் நடிக்க மாட்டேன் என்று ஒரு கருத்து சமீபத்தில் பரவி வருகிறது. அது தவறு. கதை வலுவானதாய் இருந்தால் நிச்சயம் கதாநாயகர்களோடு இணைந்து நடிப்பேன். நம்மகிட்ட எதுவும் இல்ல சார்" என்று முடித்தார்.

விஜய். புகழுக்குள் அடங்காத பொன்மனம் கொண்டவர் போலும். மின்னும் இந்த நட்சத்திரம் இயல்பிலேயே அதிகம் பேசாதவராய் அலட்டிக்கொள்ளாதவராய் தன்னைத்தான் உணர்ந்தவராய் இருக்கிறார். இது குறித்தம் பந்தா பண்ணுகிறார். என்று குற்றச்சாட்டாம். சினிமாவின் இயல்புப்படி இருப்பதும் வினாஎழுப்புமோ?

இந்த வினாக்களுக்கெல்லாம் வீணாய் விடை சொல்பவர் அல்ல விஜய் என்பதே நிஜம்.

## காதலுக்கு மரியாதை

ஜீவா-மினி இருவரும் காதலர்கள் உயிருக்கு உயிராய் அவரின்றி இவரில்லை இவரின்றி அவரில்லை என ஒருவருக்கொருவர் வாழ்பவர்கள் ஒரு சூழ்நிலையில் இருவரும் வீட்டை விட்டு செல்ல நேரிடுகிறது. அவர்களை எதிர் கொள்ளும் அவனது நண்பன் கேசவன் தன்னுடைய குப்பத்துக்கு வருமாறு ஜீவா-மினியை அழைக்கிறான். ஜீவா யோசிப்பதைப் பார்க்கும் கேசவன் "எங்களுடையது குப்பம் தான், ஏழைக்குடிசை தான். ஆனால் எங்களுக்குள் ஏற்றத்தாழ்வு கிடையாது. அனைவரும் சமம் என்று வாழ்பவர்கள் நாங்கள் என்கிறான். இதைக்கேட்டு வியப்படைந்த ஜீவா மகிழ்ச்சியோடு கேசவனை அழைத்து செல்கிறான். அவர்களை வரவேற்கும் மார்த்தாண்டம்(கேசவனின் தந்தை) அவர்களை மிகுந்த அக்கறையுடன் உபசரித்து தங்கவைக்கிறார். அவர்களின் வாழ்க்கை முறையில் உபசரிப்பில்-லயித்த ஜீவா- மினி இருவரும் அங்கேயே தங்கிவிட முடிவு செய்தனர். மகிழ்ச்சியான அவர்களது வாழ்வில் திடீர் என சோதனை வருகிறது. இருவரும் குப்பத்தை விட்டு வெளியேற முடிவு செய்கின்றனர். அவர்களைத்தடுத்து நிறுத்தும் முயற்சியில் தோல்வியடைந்த மார்த்தாண்டம் மனம் நொந்தவாறு புலம்புகிறார். "என்னுடைய 40 வருட அனுபவத்தில் இந்தக் கடலை அணு அணுவாக அலசிப்பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட என்னால் உங்கள் மனசை புரிஞ்சுக்க முடியல என்று கூற "கட்" என்று சொன்னார் இயக்குனர் பாசில்.

ஜீவா-மினி குப்பத்தை விட்டு ஏன் பிரிந்தார்கள்? மார்த்தாண்டம் ஏன் இப்படிக் கூறினார். என்பதை வெள்ளித்திரையில் பாருங்கள். இப்படி ஒரு சுவையான காட்சி சமீபத்தில் எர்ணாகுளம் கடற்கரைப் பகுதியில் காதலுக்கு மரியாதை படத்துக்காக படமாக்கப்பட்டது. இதில் ஜீவாவாக விஜய்-மினியாக ஷாலினி, கேசவனாக சார்லி, மார்த்தாண்டமாக மணிவண்ணன் நடித்தனர்.

முருகன் சினிஆர்ட்ஸ் சார்பில் தயாராகும் இப்படத்தைப்பற்றி தயாரிப்பாளர் சங்கிலி முருகனிடம் கேட்டபோது.....

காதலர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஒரு படிப்பினை சொல்கிறது. குடும்பத்தில் தாய், தந்தை, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, என்று எல்லோரும் பாசத்துடன் வாழ்ந்து வரும் போது இடையில் காதலர்கள் சிக்கல் உருவாவது இயற்கை. இதை பல படங்களில் பார்த்திருந்தாலும் இந்தப் படத்தில் ஏற்படும் பிரச்சனைகளும் அவை தீர்க்கப்படும் விதமும் பாசில் அவர்களால் புதுமை புதுமையாக சொல்லப்பட்டிருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டு. திசவீரசிங்கம் சதுக்கத்தின் அவல நிலை:

மட்டக்களப்பு மாநகர சபை பகுதியில் உள்ள திசவீரசிங்கம் சதுக்கம் 6ம், 7ம் ஒழுங்கையின் மத்தியில் குப்பைகள் தேங்கி துர்நாற்றம் வீசுகின்றது. அதனால் நுளம்புத் தொல்லையும் அதிகரித்துள்ளது. மாநகர சபை குப்பை அகற்றும் பிரிவினர் மாதத்தில் ஒருதடவையாவதும் குப்பை அகற்றுவதும் அபூர்வம். வடிகால் அமைப்புப் பிரிவினரும் வடிகால்களைத்

அங்கு தார் பாதை அமைப்பதற்காக எங்கும் கற்கள் போட்டு இவ்வாண்டு தைமாதம் 3ம் திகதியுடன் ஒருவருடம் முடிந்துள்ளது. இரவில் பாதையால் வரமுடியாத அவலம் விஷமிகளாலோ வேறுவிதத்தாலோ பாதையில் கற்கள் பரவிக்கிடப்பதனால் அதில் விழவேண்டி இருக்கிறது.

இரவில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையும் அதிகரித்துள்ளது. வேலிகளை எல்லாம் உடைத்துச் சேதம் விளைவிக்கின்றது.

விஸ்வ-தயாளன்
திசவீரசிங்கம் சதுக்கம்
மட்டக்களப்பு.

# நெற்றிக்கண்

## பணத்தின் மிகுதி சுருட்டல்

களுதாவளை பிரதேச சபை களுவாஞ்சிக்குடி மத்தியில் வீதி திருத்த வேலைகளுக்காக ரூபா 77000 (எழுபத்தி ஏழாயிரம்) ஒதுக்கீடு செய்து அதனை கறுவாஞ்சிக்குடி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்து இவ்வேலைக்கு உதவியாக பிரதேசசபை உறுப்பினரொருவரும் பிரதேசசபை தொழில்நுட்ப உத்தியோகத்தரும் கண்காணித்து வீதியின் வேலையை முடித்து அதற்கான பணத்தையும் பெற்றுக்கொண்டதில் திருப்தியடையாத பொதுமக்கள் உடனடியாக பிராந்திய உள்ளூராட்சி உதவியாணையாளருக்கு முறையிட்டிருந்தனர். இதனைக்கவனத்தில் எடுத்த ஆணையாளர் உடனடியாக நடவடிக்கையை மேற்கொண்டார். உதவியாணையாளர் A.P. விஜயரெட்ணம் அவர்களும் உதவிப்பிரதேச செயலாளர் கிரிதரன் அவர்களும் நேரடியாக அவ்வீதியைப்பார்வையிட்டு அதனை மதிப்பீடு செய்த போது அதற்காக கிறவல் போடப்பட்ட செலவு 16000 ரூபா எனவும் மிகுதித் தொகை விஷமிகளால் சூறையாடப்பட்டதும் தெரியவந்துள்ளது. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உடனடியாக இத் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்குத் தண்டனையாக அவரை அம்பாறைக்கு இடமாற்றம் செய்துள்ளார். இவ்வாறான மக்கள் பிரதிநிதிகளே இவ்வாறான பணமோசடி நடவடிக்கையில் ஈடுபடுவதில் இப்பிரதேசத்துக்கான அபிவிருத்தி எவ்வாறு மேற்கொள்ளப்படுவது எனவும் இப்பிரதிநிதிகள் இவ்வாறான பல ஊழல் மோசடிகளிலும் ஈடுபட்டு வருவதாகவும் மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

நெற்றிக்கண் பகுதிக்கு வாசகர்களிடம் இருந்து கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம். நீங்கள் வாழும் பிரதேசத்தில் நிலவும் பொதுவான பிரச்சனைகளை நீங்கள் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதி அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி
நெற்றிக்கண்
தினக்கதிர்
ப.பெ.இல-06
மட்டக்களப்பு

## அத்திவாரம் எழும்புமா?

திருக்கடலூரில் க.பொ.த. சாதாரணதரம் வரையுள்ள ஒரே பாடசாலை நாமகள் வித்தியாலயம் ஆகும். அதற்கு முதன் முதலாக அடுக்குமாடிக்கட்டிடம் ஒன்றுக்காக அத்திவாரம் இடப்பட்டு இருந்தது. இது திரு.தங்கத்துரை (பா.உ)அவர்களின் பாதீட்டு நிதிமூலம் கட்டப்பட்டது. குறுகிய காலத்தில் பாராளுமன்ற உறுப்பினரும் அகால மரணமாகி விட்டார். அத்திவாரம் அப்படியே இருக்கிறது. பின் திரு.சம்மந்தன் அவர்களை தொடர்பு கொண்ட போது அரசின் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாய் "பிஸி"யாய் இருப்பதாய் நழுவுகிறார்.

அத்திவாரம் எழும்புமா?
அடுக்குமாடி நிமிருமா?

கலாரதன்
திருமலை

திருகோணமலையில் எமது
தினக்கதிர் விற்பனை
முகவர்
டில்கா கிறீம் ஹவுஸ்
66, 68, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.
026 - 22709.

கல்முனையில் எமது
விற்பனை முகவர்
அன்பு ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி
கல்முனை

அக்கரைப்பற்றில்
எமது தினக்கதிர்
முகவர்
பாத்திமா புத்தகசாலை
சாகாம வீதி
அக்கரைப்பற்று

பயிற்சிப் பத்திரிகையாளர் தேவை.

எமது பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றக் கூடிய பயிற்சிப்பத்திரிகையாளர் தேவை.

எழுத்துத்துறையில் ஆர்வமும் க.பொ.த.உயர் தரத்தில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்

பிரதம ஆசிரியர்
தினக்கதிர்
த.பெ.இல. 06
மட்டக்களப்பு.

செங்கலடியில்
தினக்கதிர்
விற்பனை முகவர்
விப்ரா ஸ்ரோர்ஸ்
பிரதானவீதி
செங்கலடி

ஆரையம்பதியில்
எமது விற்பனை முகவர்
மதி குரோசரீஸ்
பிரதான வீதி
ஆரையம்பதி-02

வவுனியாவில் எமது
தினக்கதிர்
விற்பனை முகவர்.
கே.பி.கே. சென்ரர்.
24, பஸ் நிலையவீதி
வவுனியா.
தொலைபேசி - 024 - 22504

மட்டுநகரில் தினக்கதிர்
விநியோகஸ்தர்
கிசோனா றேடர்ஸ்
சென் அந்தனிஸ் றோட்
மட்டக்களப்பு

## இதயத்தில் இருந்து

"தினக்கதிர்" தொடர்பான உங்கள் கருத்துக்களையும். விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் எமக்கு எழுதுங்கள்.

## வார பலன்கள்
15-02-1998 - 21-02-1998

பாலு சோதிடர்

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம்பாதம்)

நீண்டகாலமாக குழப்பமாக இருக்கும், நன்மைக்காரியங்கள் முக்கியமான விடயங்கள் முடிவுக்குவரும். தொழில் அதிபர்கள், அரசஊழியர்கள் இலாபம் பெறுவர். காதல், திருமணப் பேச்சு, புதுக்காரியத் தொடர்புகள் வெற்றிகரமாக அமையும். வியாபாரம், விவசாயம், இலாபம் தரும். அந்நிய நாட்டு நற்செய்தி வந்து சேரும். திங்கள் அதிஷ்டம்.

### இடபம்

(கார்த்திகை 2,3,4ம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2ம் பாதங்கள்)

குடும்ப உறவுக்குள் இருந்த சிக்கல் நீங்கி நல்லிணக்கத் தொடர்பு ஏற்படும். அன்னிய நாட்டு பிரயாணம் நடைபெற இடமளிக்கும். பிறநாட்டிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். நீதி மன்ற வழக்கு சம்பந்தப்பட்ட விடயங்கள் சந்தோஷமான முடிவையேற்படுத்தும். தங்கம், தொழிற்பயிற்சியாளர்களுக்கு நன்மை. தொழில், கல்வி, பரீட்சை, திருமணம், காதல், வியாபாரம் விவசாயம் இவற்றில் முன்னேற்றமுண்டு. புதன் அதிஷ்ட நாள்.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3,4ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம்1,2,3ம் பாதங்கள்)

பேசி முடிவுக்கு வந்த நன்மையான காரியங்களில் சீர்குலைவு ஏற்படும். அயலிட வெளிநாட்டுப்பிரயாணத்தில் தாமதம் நிலவும். கணவன்-மனைவிக்குள் சிறிய சங்கடம் ஏற்பட இடமிருப்பதால், முன்கூட்டியே அவதானமாக இருக்கவும். காதல், திருமணப் பேச்சை தள்ளிப்போடவும். வியாபாரம், விவசாயத்தில் மந்தமாக இருக்கும். வியாழன் அதிஷ்டநாள்.

### கடகம்

(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்.)

நோயாளிக்கு நன்மையில்லை. உடல் தளர்வுக்கு இடமளித்துப் பின்பு நன்மை செய்யும். அன்னிய இடச்செய்தி, உறவினர்களின் தொடர்பு மனதை வேதனைப் படுத்தும். காதல், திருமணம் பேச்சு சிக்கலை உருவாக்கும். தனிமை நன்மை தரும். கல்வி, தொழில், வியாபாரம், விவசாயம் போன்ற வற்றில் மிகவும் கவனமாக செயல்படவும். திடீர் நஷ்டத்திற்கு இடமளிக்கும்.வியாழன் அதிஷ்ட நாள்.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் 1ம்பாதம்)

நாட்பட்ட நோயாளிகள் மருந்து சாப்பிடத் தொடங்கினால், பூரண குணம் தராது. காதல், திருமணப்பேச்சில் இழுபறியேற்பட்டு தீமைக்கு இடமளிக்கும். வியாபாரம், விவசாயத்தில் இலாபக் குறைவுக்கு இடமுண்டு. அன்னிய நாட்டுப்பிரயாணத்தில் சிக்கலை உருவாக்கும். பகைமை அகன்று உறவுக்குள் சந்தோஷம் நிலவும். கன்னிப் பெண்கள், வார இறுதியில் திடீர்ச்சந்தோஷமான செய்தி கிடைக்கும். வெள்ளி அதிஷ்ட நாள்.

### கன்னி

(உத்தரம், 2,3,4ம்பாதங்கள், அத்தம், சித்திரை, 1,2ம்பாதங்கள்)

பல தடவை முயன்றும், தாமதித்திருந்த இலாபமான விடயங்கள் வெற்றிகரமாக அமைவதோடு, புதிய உறவுத் தொடர்பு ஏற்படும். விட்டுப்போன உறவும், கைவிட்டுப்போன பொருளும் கிடைக்கும். கல்வி, பரீட்சை, தொழில், வியாபாரம், விவசாயம், உயர்வும், வெற்றியும் ஏற்படும். ஞாயிறு அதிஷ்ட நாள்.

### துலாம்

சித்திரை 3,4ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3ம் பாதங்கள்)

திடீர் சிறிய மனச்சஞ்சலம் ஏற்படும். கைப்பொருள் பணம் தவறிப்போவதற்கு இடமுண்டு. எந்தவிதமான விடயமும் நடைபெறாது மனதில் தீமையான சிந்தனைக்குழப்பம் ஏற்பட்டு இல்லாமற் போகும். தொழில் உயர்பதவிக்கு முயற்சிப்பவர்களுக்கு தாமதம் நிலவும். குடும்பத்தில் நற்புறவு மேன்பாடு ஏற்படும். சனி அதிஷ்ட நாள்.

### விருட்சிகம்

(விசாகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை)

அன்னிய இடச்செய்தி மனதுக்கு சந்தோஷமாக அமைவதோடு நீண்ட பிரயாண பலனுக்கு இடமளிக்கும். நீண்ட காலமாக மனதைத் தொல்லைப்படுத்திய சிக்கல்கள் நீங்கி சந்தோஷம் நிலவும். காதல், திருமணப்பேச்சில் மிகமிக அவதானமாக செயல் படாவிடில் சிக்கலை ஏற்படுத்தி விடும். ஞாயிறு அதிஷ்டநாள்.

### தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம்1ம் பாதம்)

அன்னிய நாட்டுத் திருமணத்தொடர்பு ஏற்பட்டு பிறநாட்டுப பிரயாணம் சிறப்பாக அமையும். வியாபாரம், விவசாயம் இலாபம் செய்யும். அளவு கடந்த மனச் சந்தோஷம் உருவாகும். காதல், திருமணத்தொடர்பு, தொழில் பயிற்சி, பதவி உயர்வு, புதிய அரச தொழில் பிரவேசம், கல்வி, பரீட்சை இதுபோன்ற சிறப்புக்காரியம் நன்மையே செய்யும். திங்கள் அதிஷ்டநாள்.

### மகரம்

(உத்தராடம், 2,3,4ம் பாதங்கள்)

மனித இடையூறு நீங்கும். நோய் குறையும், உடல் சுகம் அளிக்கும். வேதனையால் வாடியவர்களுக்கு விடுதலையேற்படும். கோட் விவகாரம் நன்யைாக அளிக்கும். வேதனையால் வாடியவர்களுக்கு விடுதலையேற்படும். கோட் விவகாரம் நன்யைாக முடியும். தேகாரோக்கியம் ஏற்படும். வாகனச்செலுத்துனர்களுக்கு திடீர் இலாபம் ஏற்படலாம். வியாபாரம், விவசாயம், தங்கம், மாணிக்கக்கல் வியாபாரி களுக்க இலாபம் ஏற்படும். கர்ப்பிணித்தாய்மார்க்ளுக்கு நன்மை. புதன் அதிஷ்ட நாள்.

### கும்பம்

(அவிட்டம் 3,4ம்பாதங்கள், சதயம், பூரட்டாதி, 1,2,3ம் பாதங்கள்)

விவாகம், காதல், நன்மையாக அமையும். திரவிய இலாபம், கல்வி, தொழில், முன்னேற்றம் ஏற்படும். விவசாயம், வியாபாரிகளுக்கு இலாபம். நீண்ட காலத்துக்கு முன்பு விட்டுப்போன நட்பு மீண்டும் தொடரும். ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு உடல் பிணி தோன்ற இடமளிக்கும் வார இறுதி சந்தோஷமாக அமையும். சனி அதிஷ்ட நாள்.

### மீனம்

(பூரட்டாதி 4ம்பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

புதுஉறவுச்சேர்க்கையும், திடீர் திருமணத்தொடர்பும், அன்னிய இடம், பிறநாட்டு பிரயாணம் நடைபெறும். சுயமுயற்சியாளர்கள் தனியார் நிறுவனம், தொழில் அதிபர்களுக்கு இலாபம். அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு புதுத்தொடர்பால் பணப்புழக்கம் உருவாக இடமுண்டு. இளம் பெண்களும், கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் நன்மை. திங்கள் அதிஷ்டநாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூச்செண்டு

நாற்காலி ஒரு காலையிழந்து தவம் புரிய, குழந்தை அழுது கொண்டாள். விக்கி, விக்கி அழுதாள்.
பூச்செண்டு குதறியெறியப் பட்டு அவலட்சணமாக ஒரு மூலையில்.....
கோமதி, தலைமுடி குலைய கண்களைக் கசக்கியபடி நெற்றியிலிருந்து வழியும் குருதியை விரல்களால் வழித்துச் சட்டையில் துடைத்தாள்.
கதிரைக்கால் நெற்றியில் பட்ட இடம் விண்ணென்று வலித்தது. குழந்தை வீரிட்டழுது விக்கிக் கொண்டாள். தொடர்ந்து,

சோமு, குழந்தையைத் தூக்கியபடி மாடியிலிருந்து இறங்கி வெளியுலகுக்கு வந்தான்.

அந்த வீடு புறாக்கூடுகள் போன்ற தொடர்மாடி வீடு, அற்புதமான சிறைக்கூடுகள் போன்றவை, இவைகள். இதற்குள் தாம் யாவும், அழுகை, சிரிப்பு, மகிழ்வு, துக்கம்..... வெளியில் செல்லும் போதெல்லாம் சூரிய தரிசனம் பெற்று துளிர்க்கும் செடி கொடிகள் போல் மனமும் துளிர்க்கும்.

காற்று, தென்றலாய்த் தழுவியது.

குழந்தை அழுகையை நிறுத்தி விட்டாள். ஆனால், சோமு, மௌனத்தில் அழுது கொண்டாள்.

"என்னதாம் நடந்தாலும் எதிலும் உணர்வுகளின் வீழ்ச்சிதாம் சாத்தியமாகும். என் உணர்வுகளின் கொடிய உக்கிரத்தில், இப்போது நானே, பாதாளத்தில் வீழ்ந்து விட்டேன். எனக்கு, ஒரு பெண்குழந்தையிருக்கிறாள். அவள், எங்கட அலங்கோலத்தில் உடைந்து உருகுகிறாள். இங்கு வீழ்ச்சிகள் தினமும் மலிகின்றன. குழந்தை மிகவும் பயங்கொண்டு விட்டாளே! மூடன் மலத்தை மிதித்தால் பல இடங்கள் நாசமாகும்" என்பாள் அம்மா.

"நானும் மூடன் தாமோ?" "இவ்வளவும் ஏன்? ஒரு பெரும் பூகம்பம் போல் ஏன்? "அற்ப விஷயங்களுக்கு அரிவாள் தூக்கினால் கடைசியில் மனிதாபிமானம் கொலையாகிப் போயிடும். "எனக்கும், இன்னொருவருக்குமான தொடர்பு வெறும் உரிமை பாராட்டும் ஒன்றாய்ப்போச்சு. இது போலித்தனத்தின் கடைக்கோடிக்குத்தானே போயிட்டுது?

குழந்தை மீண்டும் அழத்தொடங்கினாள். கையின் அணைப்பில் இருக்க விரும்பாது நழுவிக் கொண்டாள். நிலத்தில் இறங்கிக் கொண்டாள். சோமுவுக்கு, வெறுமையாய் படர்ந்திருந்தது அன்றைய பொழுது.

கோமதிக்கு விசும்புத்தனமும், விடாப்பிடியும் கூடப்பிறந்த சகோதரங்கள் போலத்தாம். எப்பவும், ஏதாவது ஒரு நிகழ்வுக்கு அவள் தாம் காரணமாய் இருப்பாள்.

வளைந்து, நெளிந்த குடும்ப வாழ்வில் ஆரோக்கியத்தை எதிர்பார்ப்பது முட்டாள் தனம் தாம். என்றாலும், இப்போதைக்கு நிமிர்த்தி யெடுத்துக்க முயற்சிக்கத்தானே வேண்டும்! சிறைகூடமும் போலவுள்ள குடும்பவாழ்வில் சாத்தியமான வரை எல்லோரும் கைதிகள் தாம். இதற்கு?, சோமுவோ/ கோமதியோ அல்லது, அவர்களின் குழந்தையோ விதி விலக்காக முடியாது!

முடியுமென்பது சோமுவின் நிலைப்பாடு.

கோமதிக்கு, இதில் நாட்டமில்லை.

சோமு, முயன்ற போதெல்லாம் இருந்த இடத்திற்கே மீண்டும், வந்து விடுவான்.



"வாழ்ந்து பார்த்தால் தாம் அதனதன் அர்த்தம்-இயல்பு புரியும். இப்ப மட்டும் என்ன நடந்தது?"

"எதற்காக நான், குழந்தையையும் தூக்கிக் கொண்டு வெளியில் வருவான்? கோமதி குருதி தோய ஒரு மூலையில் வெதும்புகிறாளே ஏன்?" சோமுவுக்கு கேள்விகள் மனதைக் குடைந்தன.

அவன் விழிகள் இப்போது பனிக்க, கபாலம் பிழந்து படிமப்பூச்சி சிறகடித்தது.

"விடுமன் கொஞ்சம் சந்தோஷமாக இருப்பம்."

"உமக்கு சொன்னாப் புரியாதோ?, மனுஷருக்கு, ஒருக்காத்தாம் சொல்லுறது, முடியாது!

"இண்டையோட எத்தினை நாள்?"

நாள் கணக்குப் பார்க்க இதென்ன வியாபாரமா?"

"போதும் நிறுத்தடி. ஒரு மாதமா ஒண்டுமில்லை, குரங்கு."

"அடி, கிடியெண்டு இழுக்காதேம். உம்முடைய வளர்ப்பைப்பார்!, சுத்த பட்டிக்காடு."

"பளீர்" கன்னம் வீங்கியது கோமதிக்கு.

அவள் விடுவாளா?, பதிலுக்கு கொடுத்தாள். அவன், கதிரையால் தாக்கினான்.- நெற்றியிலிருந்து குருதி வழிந்தது. கோமதிக்கு படிமம் விலக மீண்டும் அவன் தனக்குள் எதையோ தேடலானான்.

"ஏன்"?

"நானொரு மூடனா? அல்ல, சுத்த பட்டிக்காடா??"

அவள், சொல்வது போல் பட்டிக்காட்டிலிருப்பவர்களெல்லாம் இப்படியா முட்டிக்கொள்கிறார்கள்?

அப்பா, அம்மா ஏழு பிள்ளைகளைப்பெற்று வளர்த்தார்களே! அவர்கள் இப்படி முட்டி மோதினதை நான் காணேல்லையே. சந்தோஷம் என்பது என்ன?, ஆணுக்கும், பெண்ணுக்கும் இப்படி என்னவொரு உறவு?

இரண்டு மனங்களின் ஒருமை என்பது வெறும் விட்டுக்கொடுப்பு எண்ட போலித்தனமா?, ஒருவரையொருவர் மதிக்கமுடியாதா?, வார்த்தைக்கு/ சூழ்நிலைக்கு, சந்தர்ப்பத்திற்குக் கொடுக்கும் மதிப்பை, ஏன் மனிதவுணர்வுகளுக்குக் கொடுக்க முடியவில்லை?

கோமதி ஏன் இப்படி அடம்பிடிக்கிறாள்?

என்ன குறை அவளுக்கு? மனதிற்குப் பிடித்தமாக தாமே எல்லாமிருக்கு. இதற்கு மேல் என்னத்தைப்பெரிதாக எதிர்பார்க்கிறாள்?, இன்றுடன், ஒரு மாதத்திற்கு மேல்.... உடன் படுகிறாளா? இல்லையே! தள்ளித் தள்ளி விடுகிறாள். போதாக்குறைக்கு வாய்வேறு வைக்கிறாள்.

அன்றைக்கொருநாள் சொல்கிறாளே உங்களுக்கு இதைத்தவிர வேற ஒண்டும் தெரியாது, சாப்பிடவும், என்னைச் சிதைக்கவும் தாம் தெரியும், ஒரு வேளை, உண்மையில் "அவளுக்கு விருப்பமில்லாமலா இவ்வளவு நாளும் நான் உறவுற்றேன்?

கடவுளே!

பெண்மையைப் புரிய முடியாதா?, இந்த ஆயுளில்?....அவளை சகதோழியாக, நண்பியாகத்தானே மதிக்கிறேன். இந்த உரிமையில் நான், போலியான கற்பிதங்களைக் களைந்து விட்டு உறவாட முடியாதா? மற்றவர்கள் போல "வாங்க-போங்க, உங்களுக்கு விருப்பமா இதில?...." இப்படி ஏன்?

இரு மனங்களுக்குள் ஒருமை என்றால் வார்த்தைகள் என்னத்திற்கு?, ஒருமித்த தாகமும், தேடுதலும் விளையாடாதா?

அவன் அடிக்கடி சொல்வது போல் "எங்க கூட்டிக்கொண்டு போகிறீர்?" என்பதில் அர்த்தமுள்ளதா?

எங்கு போறது?

யார் வீட்டுக்கு?, எந்த உறவில்?, எந்த நட்பில்?

எல்லாம், ஓடும் புளியம்பழமுமாகத்தாமேயுள்ளது?, இதென்ன ஊரா? அந்நிய மண், அகதி வாழ்க்கை. வேலையொருபுறம் உடம்பை முறிக்க- வெளியில் எங்கு உலாத்துகிறது! இவள், இருந்திருந்து வரும் போதுதாமே உடம்பு உயிர்க்கிறது. மீண்டும் வேலைக்குப் போக.

"சினிமாவுக்குக் கூட்டிப்போ" என்கிறாள்.

சினிமாத் தியேட்டரின் நிலை என்ன?

விசிலடி, நக்கல், உரசல், தேயல்கள்...

என்னைப்போல தாம் எல்லா ஆண்களுமிருப்பார்கள். ஐரோப்பிய அகதி வாழ்வில் நாம் ரொம்பத்தான் மாறிவிட்டோம். ஒரு வகையில் இதன் விளைவுதானே இப்போது என் தலையில்.

"ஐயோ, அப்பா!" குழந்தை அழுது கொண்டாள். யாரோ கூட விளையாடிய சின்னஞ்சிறு அவளை நிலத்தில் தள்ளி விட்டுட்டார்கள். சோமு நிஜவுலகுக்கு வருமுன் குழந்தை மீண்டும் எழுந்து விட்டாள். கூடவே சேர்ந்து ஊஞ்சலாடிக்கொள்ள முனைந்தாள். சோமுவுக்கு, இதுபற்றி எதுவுமே தெரியாது. அவன், தொடர்ந்து விளையாட்டு முற்றத்திலுள்ள மரவாங்கில் அமர்ந்தபடி தன்னை அறிவதில் மும்முரமாக....

கோமதி, நெற்றியிலிருந்து வரும் குருதியைத்துடைத்து "பிளாஸ்டர்" போட்டுக் கட்டினாள். அவள், விழிகளிலிருந்து இப்போது கண்ணீர் வரவில்லை. நெஞ்சுமட்டும் கொதி நிலையிலிருந்தது.

"யாருக்காக வாழ வேண்டும்?

இது தாம் வாழ்வா?

அம்மா, அப்பாவோடு வாழும் வரை தாம் இருக்குமா?

ஏன்?

அவருக்கு, ஒவ்வொருநாளும் வேணுமெண்டால்....?

ஒவ்வொருநாளும் என்னைச் சிதைக்கிறானே, இது மட்டுமா வாழ்வு? ஒரு குழந்தையையும் பெத்து வைச்சுக்கொண்டு இவ்வளவு ஆட்டம் போடுகிறானே! விரிந்த மனத்தில் எண்ணச் சிதிலங்கள் சிறகடித்தன....

எதை எதிர்பார்த்து இவனைக் காதலித்தேன்?

அழகான பேச்சு, அற்புதமான புத்திசாலித்தனம்

எல்லேரையும் விட இவனிடம் ஏதோ இருக்கிறதே! அன்பைப் பொழியும் போது கூட இவனுக்கு நிகர் யார்? இவ்வளவு இருந்தும் குரங்குக் குணமும் வைச்சிருக்கிறானே!

கடவுளே!,

இவனிடமுள்ள கட்டற்ற இந்தக் குரங்குக் குணத்தை போக்க மாட்டியா? கேவலமான முறைகளிலெல்லாம் உறவுறவாறானே. என் விருப்பத்திற்கு மாறாக எத்தனை முறைகள்.... இண்டைக்காவது புரிந்தானா?

என்னால் முடியாது.

இவன் தாகத்திற்கு மோகத்திற்கு ஈடுகொடுக்க முடியாது!

ஊரிலுள்ள எல்லாப் பொம்பிளைகளும் "இதே" அலங்கோலத்தில் தாம் வாழ்கிறார்களா?, ஏன் இப்படி?

கல்வியை மறுத்து காதல் வயப்படுதல் முடியாதுதாம்.

எண்டாலும், இதுதாம் வாழ்க்கையில்லை.! "இளமையில் நாளுக்கு மூன்று முறை மனைவியுடன் கட்டிலில் சேர்" என்கிறானாம் வைரமுத்து. குடும்பத்தையும் விபச்சாரத்தையும் சமப்படுத்துகிறானே!

கோதாரி பிடிச்ச இவனுக்கு மனநோய் போலத்தாம் கிடக்கு. இயல்புக்கு மாறாக உறவுற வருவானா? தன்னால் முடியாது போனாலும் பேருக்கு நச்சரிக்கிறானே!

இவனுக்கு என்ன நடந்தது?

எனக்காகத் தாம் உறவுறுகிறானா?

நான் கேட்டேனா?, வா, வந்து என்னோடு கூடிக்குலாவு என்றானே?, ஏன்? "உனக்கு திருப்திதானே?" என்று அடிக்கடி கேட்கிறான். நான் பதிலேதும் சொல்ல மாட்டேனாவென்றும் அவன், ஏங்குவதும் தெரியுது.

அடேய் மடையா! ஒரு பெண் திருப்தியில்லையென்று வாய்விட்டுச் சொல்வதில்லை. அதுபோலதாம் திருப்தியும்! திருப்தியாக வேறு வழியும் பெறுவதில்லை. நீ, எனக்கு ஏற்ற புருஷனில்லையென்றால் இவ்வளவு நாளும் வாழ்ந்திருக்க முடியுமா?. பத்து வருஷமாக உனக்கு முந்தானையை விரிக்க வில்லையா?, பிள்ளை பெறவில்லையா?

இப்ப சமீபத்தில் தானே உன் போக்கு, நாய் போக்காக இருக்கு? இப்ப ஒரு வருஷமாக என்னைச் சிதைக்கிறாயே!

நான் இயந்திரமா?

சொல்லு சோமு, சொல்!

நீ என்னளவில் விவரமானவன். எனக்குப் பிடித்தமான நண்பன், தோழன், அண்ணன், அப்பா-அம்மா எல்லாமே நீ தாண்டா!,

நீ சொல்.

இப்ப வேறு அடிக்கத் துடங்கிவிட்டாய், பரவாயில்லை!

உன் கையால் சாவதும் விருப்பம் தான்டா.

சிந்தனை வயப்பட்ட கோமதிக்கு குழந்தை ஞாபகம். எப்படியோ வந்து விட்டது. அவள், சாளரத்திற்கூடாக வெளியில் விளையாட்டு முற்றத்தை நோட்டமிட்டாள்.

குழந்தையை நாலைந்து

ப.வி.சிறீரங்கன்

சிறுகதை

தொடர்ச்சி 10ம்பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப்போட்டி இல - 01



### போட்டி நிபந்தனைகள்

★ பத்திரிகையில் வெளியாகும் கூப்பனையே நிரப்பி அனுப்ப வேண்டும்.

★ ஒருவர் எத்தனை கூப்பனையும் அனுப்பலாம்.

★ சரியான விடையை அனுப்புவோரில் அதிஸ்டசாலியான ஒருவருக்கு 50 ரூபா பணப்பரிசு வழங்கப்படும்.

★ ஆறுதல் பரிசு பெறும் 4 பேருக்கு ஒரு மாத காலத்திற்கு "தினக்கதிர்" இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

போட்டிக்கான கூப்பனை நிரப்பி **28-02-98**க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி

குறுக்கெழுத்துப் போட்டி~இல~01
ஆசிரியர்
தினக்கதிர்
த.பெ.இல: 06
மட்டக்களப்பு.

### மேலிருந்து கீழ்

01. கொழும்பிலிருந்து புதிதாக வெளிவரும் தேசிய நாளிதழ்.
02. இலங்கைத் தீவில் எங்கும் காண முடியாதது இதனைத் தேடுவதாகச் சொல்லிச் சொல்லியே இதனைக் குழப்பி விட்டார்கள்.
03 ஒளிமுதல்
04. கத்தியைத் தீட்டாதே இதனைத்தீட்டு என்றார் கவிஞர். இங்கு குழம்பிவிட்டது.
05. நொந்துபோன மனதிற்கு இது தேவை. ஆனால் எவருக்கும் இலகுவில் கிட்டுவதில்லை.
08. இலங்கையில் பொ.ஜ.முன்னணி பதவிக்கு வந்ததும் நியமிக்கப்பட்டவர். இவரிடம் யாரும் யாரைப் பற்றியும் முறையிடலாம்
11. இலங்கையில் 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' வானொலி நிலையம் அமைந்துள்ள இடம் அங்கு இடம் பெற்ற ஆர்ப்பாட்டங்களால் சற்று குழம்பிவிட்டது.
13. சகல சீவராசிகளிடத்தும் இதனைச் செலுத்த வேண்டும்மென புத்தர் போதித்தார். நடைமுறையில் யார் கவனிக்கிறார்கள்?

### இடமிருந்து வலம்

01. மட்டக்களப்பிலிருந்து 98 ஜனவரி தொடக்கம் வெளி வரும் புதிய வாரப்பத்திரிகை.
05. எண்ணாகவும் வரும்; நீர்த் தேவையையும் பூர்த்தி செய்யும். பெருகிவிட்டால் ஆபத்து.
06. இது ஒரு குரங்கு. அதுதான் எழுத்துக்கள் இடத்தைவிட்டுத் தாவி விட்டன.
07.வேண்டாமென விலக்கியிருத்தல் எனும் பொருள் தரும் நல்ல தமிழ்ச் சொல் ஏனோ குழம்பியுள்ளது.
09. இது இல்லையில் சிவனும் இல்லை. இயக்கமும் இல்லை.
10. அனைத்து மனிதரிலும் இது மட்டும் ஒரே நிறம். இதன் அளவு கூடினாலும் நோய். குறைந்தாலும் நோய்.
12. கணவனை இழந்தால் விதவை. மனைவியை இழந்தால்...? சோகத்தில் குழம்பி விட்டார்.
15. தென்னிந்தியத் திரைப்பட இளம் நாயகன் சக நடிகையை ஏமாற்றிவிட்டு திடீரென கல்லூரி மாணவியொருத்தியைக் கரம்பிடித்து விட்டார்.
16. இது இல்லாமல் வவுனியாவில் நடமாட முடியாது.
17. பறவையொன்று பெண்களின் நடைக்கு புலவர்கள் இதனை ஒப்பிடுவர்.
18. கண்ணகி இவளை வெறுத்தாலும் அவள் கணவனுக்கு பிடித்தவள்.
19. சிற்பி வடிப்பது.

## கோயம்புத்தூர் குண்டுத் தாக்குதல் விடுதலைப்புலிகள் மீது பழி

அண்மையில் கோயம்புத்தூரில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மீதும் சந்தேகம் எழுந்துள்ளதாம்.

பல இலங்கைத் தமிழர்கள் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர். இக்குண்டுத்தாக்குதலை விடுதலைப்புலிகள் தான் செய்துள்ளனர் என சில தீய அரசியல் சக்திகள் முடிச்சுப்போட்டு ஈழத்தமிழரை வருத்துவது வேதனைக்குரியதே

காத்தான் குடியில்
தினக்கதிர்
விற்பனை முகவர்
நவாஸ் ரேடர்ஸ்
76, பிரதான வீதி
காத்தான்குடி

## பூச்செண்டு.....

சிறுசுகள் ஊஞ்சலில் வைத்து ஆட்டிக் கொண்டிருந்தார்கள். கோமதி பெருமூச்சு விட்டுக்கொண்டு சோமுவை நோட்டமிட "அவன்" மரவாங்கில் மல்லாந்து கிடந்தபடி வானைப்பார்த்து அவள் விழிகள் முன்.

சோமு விபரமானவன் தாம்.

அவன் தன்னை கேள்விகளுக்குள் உட்படுத்துகிறான்.

கோமதிக்கு சிதைந்து போய் கிடக்கும் பூச்செண்டும், கதிரையும் விழிகளில் விகாரமாகத் தெரிய அவள் அவற்றை ஒழுங்குபடுத்த முனைகிறாள். கூடவே, ஒரு மாதமாக இருக்கும் விரதத்தையும் முடிவுக்குக் கொண்டு வர யோசிக்கிறாள்.

நேற்றுக் கூட வேலை செய்கிற இடத்தில் கூட வேலைசெய்யும் பெண்ணோடு கதைக்கும் போது அவள் மார்பு மீது தானே என் பார்வை போனது?...

நான் யார்?

காமுகனா?, இல்லை, பாலியல் நோயாளியா?, இவ்வளவு காலமாக "நான்" இப்படியிருக்கவில்லை! சமீபகாலமாகத்தானே, எவளைக்கண்டாலும் -அவள் ஆடைக்குள்ளே எப்படி,எது என்ற கனவுகள்- அக்கா, தங்கையோடு பிறந்தும், ஒரு பெண்ணை வெறும் போதைக்குரிய, நுகர்வுக்குரிய, பொருளாக நான் பார்க்கத் தொடங்கியது எப்போது?

ஜெர்மனி வந்தும் பல காலம் மனிதனாக, கோமதியோடு குடும்பம் நடத்தியுள்ளேன். இப்போது...அப்பிடி...ஏன்? இது வாழ்வாகுமா?, அல்லது இயல்பாகுமா?

இந்த உணர்வுக்கு மூலம் எது? எதற்காக "நான்" கை நீட்டிடனும்.

அற்ப உணர்வுக்காக!, ஒரு ஐந்துநிமிட சுகத்திற்காக இது மட்டுமா வாழ்வு: இதற்கப்பாலும் விரிந்து மேவும் பரஸ்பர அபிமானம் எங்கே? இதன், அர்த்த புஷ்டியான மென்மையான இலக்கணங்களின் மான்சீகம் எப்படி என்னை உதைக்கவில்லை?, ஏன்?..

தாய் ஒரு வார்த்தை, ஒரு வாழ்வு!

இதன் மிதமான மதிப்பீடு எங்கு பிறக்கிறது?,

எதன் உச்ச ஜீவகத்தில் பிரவகிக்கிறது?, உலகத்தின் மிதி பலகைபோல பெண்ணொருத்திக்குத் தாய்மை மகுடம் சூட்டி விட்டால் போதுமென்ற என் உள்ளுணர்வு எங்கனம் எனக்குள்?

அழுக்கு....

அற்ப உணர்வுகளுள் மூழ்கிவிட்ட மாகாபெரிய திமிர், ஆண்மையின் வீழ்ச்சியோடு முடிவுரைக்குத் தயாராகும் கைதூக்கல்.

மௌனித்து விடும் உணர்வுகளின் வார்த்தைக் கொப்பளங்களுக்கு தாழ்ப்பாளாக இதைப்பயன்படுத்தியே, இது நாள் வரை தீர்வு கண்டு விட்டேன். இஃது இயல்பான வாழ்வாய் இதற்குள் "என்" விருப்புகளின் ஜனனமாக வரும் ஒழுக்கங்களை அவள் மீது மட்டும் சுமத்திக்கொண்டு வருகிறேன்.

வர்ணங்கள் தோன்றுகின்றன. வஞ்சிக்கப்பட்ட இரகசியங்களும், கும்மாளமிடும் மானசீக விருப்பங்களும், சோமுவின் மனக்கண்முன் விரிவதற்கு போட்டியிட்டன.

இருட்டு அன்றைய பொழுதுபோல் பல பொழுதுகள் அவன்முன்.

தொலைக்காட்சியின் கனைப்பில் காட்சிக் குவியல்கள். ஒரு கையில் ஒவ்வொரு முறையும் பாரமாக அழுத்தும் தசைப்பிண்டங்கள்: தசை, தசை முற்றுமுழுதுமே நரைக்கூட்டம். இதென்ன? இவ்வளவு வஞ்சிப்பு?

ஒவ்வொருவரும் மாறி மாறி ஏறிக் கொள்கிறார்கள். அவளுக்கு சலிப்பில்லை!

இன்னும்

யாருக்கு முடியும்?, அவர் முதலில் வரலாம்.

வருகிறார்கள்.

மல்லுக்கட்டுகிறார்கள். இருபது செண்டி மீட்டரின் வீரியங்கூட தோற்கிறது.

சோமுவின் கைகள் மணிக்கு எழுபது மைல்கள் வேகத்தில் இயங்குகிறது.

உலகம் இவ்வளவு தாம்!

சீ....:இது தெருப்பொறிக்கிகளை விட மோசமான நிலை.

தவிப்பு: தலைகுனிவு. தொலைக்காட்சியை அடித்து நிறுத்தல், நடுச்சாமத்தில் மனைவி, குழந்தையின் தூக்கத்தை கெடுக்காமல் கட்டிலில் தட்டுத் தடுமாறி இடம் பிடித்து குப்புற விழுந்து விடியலுக்கு முன்னெழுந்து இயந்திரத்தோடு இயந்திரமாக.

எத்தனை இரவுகள் இப்படி? வர்ணங்கள் மறைகின்றன.

தொலைக்காட்சி மட்டும் சோமுவின் விழிகள் முன். வெறும் கண்ணாடியும், மரப்பலகையும் அப்போ எனக்குள் வந்த வர்ணங்கள்?....

நான் பெற்று வந்த இன்பங்கள் எங்கே?...

என்ன இது?
Night Affaires
Liebe Sunde:
Wa(h) liebe:
Exklusiv die Report-age:
Erotik film :
Peep show!

இவ்வளவும் இப்படி நூலிழையாய் என் மனவதைக்குள்?

சும்மாதானே பார்த்தேன்!

ஒரு சுகத்தின் தொடக்கமாக சுதந்திரமான விவாதமாகத்தானே "இவை" எனக்குள் வந்தன? இதில் லயித்த போதே தாமே பேரின்பம் பொங்கியது போல் சிலாகித்தேன்!

இப்போது இவை வதையாகிறது.

தேவைக்கு அதிகமான தாகம். எங்கும் எதிலும் வெறுப்பு. அவளை நினைத்து இவளை... பல்முறை சிதைக்கிறதில்தானே அவளை அடக்குவதாக.... ஆனால்,

அச்சம்: அச்சம். இதுதானே சகலதையும் வெறியோடு தாக்குகிறது.

என்னைவிட இன்னொருவன் கெட்டிக்காரனானால்? நான் எங்கே?

போச்சு.

சந்தேகம். அவன் கதைத்தால்- அவளுக்கும், இவனுக்கும்.... இரகசியமான ஆய்வுகள் பொலிஸ் நாயைவிட மோப்பங்கள்: ஒன்றுக்கு இரண்டான சோடினைகள். பாரம் நெஞ்சில் மேவிக்கொள்கிறது.

எதுசொன்னாலும் அடிக்கிறேன்.

இப்ப ஒரு மாதமாக ஒண்ணுமில்லை.

ஏன்....?

மீண்டும் வதை.

காட்சிகள்: நிறங்கள். ஒன்றையொன்று மேவ சோமு மரவாங்கினில் தற்காலிகமாக அமரத்துவம்.

"கவிதாஞ்சலி: பிள்ள கவி:" கோமதி சாளரத்துக்கூடாக தன் குரலை வெளிச்செலுத்தினாள். சோமுவின் செவிகளில் அவள் குரலொலி நிச்சயமாகப்படவில்லை. ஆனால், உள்ளுணர்வு தூண்டுகிறபோது விழிப்படைகிறாள்.

குழந்தை, தாயின் குரலொளியின் வீச்சில் தாய் மீது பார்வையைக் குவிக்க, சோமு அவளை அள்ளி எடுத்து தோளில் போட்டான்.

இன்றைக்கான அவளது விளையாட்டு முற்றுப்பெற்றது. சோமுவின் கால்கள் மாடியேற மறுக்கின்றன. எனினும் மனசைத் திடமாக்கிக் கொண்ட சோமு "நான் இரவு பத்துமணிக்கு மேல் தொலைக்காட்சி பார்ப்பதில்லை: "ஆய்வு" மனம்திறந்து பேசுதல், போன்ற பாணியில் தொலைக்காட்சி நிறுவனங்கள் போடும் வக்கிரங்களை நாடுவதில்லை. எல்லாம் கோமதிக்குள்: எல்லாம் குடும்பத்துக்குள்" என்றபடி நடக்கிறான்.

"என்னடி இவ்வளவு நேரம் செய்தனீ?" -கோமதி செல்லமாக மகளுடன் கோபித்தாள்.

"விளையாடினான்!"

கவிதாஞ்சலி,

"வாடி முகங்கழுவ" கவிதாவுக்கு முகங்கழுவி, கிறீம் போட்டு- தயாரித்திருந்த தேனீரையும், ரொட்டியையும் கொடுத்து T.V.யில் கின்டர் புரோகிறாம்" போட்டு அவளை அதன்முன் இருத்தினாள்.

சோமு கட்டிலில் மல்லாந்து கிடந்தான்.

கோமதி அவன் மார்போடு மார்பாக மலர்ந்தாள்.

அங்கு, வார்த்தைகள் வறுமையாகின. நீண்ட நேர தியானத்தின்பின் இரு நதிகளும் சங்கமமாகின..

வேர்வைகள் முத்து முத்தாய் இருவருக்கும் பெருக்கெடுக்க ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டனர்.

"சோமு"

"கோமதி"

"என்ன?"

"ஒண்டும் இல்லை!"

சோமுவின் விழிகள் பழையபடி அறையை மேய்ந்தன காலுடைந்த கதிரையைக் காணவில்லை. ஒழுங்குபடுத்தி, மீளவும் பூக்களைச் சேர்த்துக் கட்டி- புதிய நீர் விட்டு "பூச்சாடியாய்" பூச்செண்டிருந்தது. "இது எவ்வளவு அழகாக இருக்கு. உறவுகள் என்ற பூக்கள் எல்லாம், அன்பென்ற நாரினால் பிணைக்கப்பட்டு பண்பென்ற சாடியுள் இருந்தால் எவ்வளவு அழகாக இருக்கும்?, இந்தப் பூச்செண்டைப் போல்!" சோமு எண்ணிக் கொள்ள கோமதி "என்ன பூச்செண்டைப் பார்த்தபடி? நான், அதை சரிப்படுத்திவிட்டேன்." என்றாள்.

(முற்றும்)

நன்றி:- ஈழமுரசு - பாரிஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர்பகுதி

குட்டிக்கதை படிப்போம்

## நாயும் செம்மறியாடும்

நாய்களெல்லாம் கூடித் தங்கள் இனத்தைப் பற்றியோசித்தன. நாம் ஒரு தடவைக்கு நாலைந்து குட்டிகளைப் போடுகிறோம் என்றாலும் நமது இனம் பெருகக் காணோம்; ஒரு ஊருக்கு ஏழெட்டுப்பத்து நாய்களுக்குமேல் காணமுடியவில்லை. செம்மறியாடுகளைப் பாருங்கள்; ஒரு தடவைக்கு ஒரு குட்டிதான் போடுகின்றன. அதன் இனம் ஆயிரக்கணக்கில் பெருகிக் கிடைகிடையாக வாழ்கின்றது. இதற்குக் காரணம் என்ன? இது கடவுள் படைப்பிலுள்ள ஏதோ கோளாறுதான்; 'வாங்கடா எல்லாரும் போய் கடவுளிடம் கேட்போம்' என்று படையெடுத்துப் போயின.

சரி வாருங்கள் என்று கடவுள் எழுந்தருளி வந்து இரண்டு தொழுவங்களை கட்டச் செய்து ஒன்றில் நூறு செம்மறி ஆடுகளை அடைத்துக் கொஞ்சம் புல்லுக்கட்டைப் போட்டு வைத்தார். இன்னொன்றில் கொஞ்சம் இறைச்சித் துண்டுகளைப் போட்டு வைத்து நூறு நாய்களைத் தள்ளியடைத்தார். விடியற்காலம் இரண்டு தொழுவத்தை திறந்து காட்டினார். செம்மறியாடுகள் புல்லைத் தின்றுவிட்டு ஒன்றின்மேல் ஒன்று தலைவைத்தப் படுத்து அசைபோட்டுக் கொண்டிருந்தன. நாய்களோ, அடித்துப் புரண்டு ஒன்றையொன்று கடித்துக்குதறி கால் போனதும் கை போனதும் காயமும் இரத்தமுமாகக் காட்சியளித்தன.

உடனே கடவுள் சொன்னார். பார்த்தாயா? ஒரு குட்டி போட்டாலும் ஒற்றுமையாக இருப்பதால் செம்மறியாட்டின் இனம் பெருகுகின்றது. பல குட்டிகள் போட்டாலும் ஒற்றுமையில்லாமையால் உங்கள் இனம் தேய்கிறது. ஆகவே இதற்குக் காரணம் நீங்கள்தானே தவிர, நானல்ல என்றார்.

(தமிழ்நாட்டு கிராமியக் கதைகள்)

## அறிந்து கொள்ளுங்கள்
## கின்னஸ் புத்தக வரலாறு

உலகத்தில் பல வீரர்கள் தங்கள் சாதனைகளை 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்பதற்காக பல்வேறு போட்டிகளிலும் உற்சாகமாக கலந்து கொள்கிறார்கள். ஆனால் இந்த 'கின்னஸ்' தோன்றிய வரலாறு அதிகமான பேருக்கு தெரியாமல் உள்ளது.

'கின்னஸ் புக் ஒ.்.ப் த வேல்ட்' என்பது ஒரு புத்தக வெளியீட்டு நிறுவனமாகும். சேர். கக் பீவர் என்ற ஆங்கிலேயரால் தொடங்கப்பட்டது. சேர். கக் பீவர் ஒரு முறை வேட்டைக்குச் சென்றார். அப்பொழுது 'கோல்டன் பிளவர்' என்ற பறவையை அவர் துப்பாக்கியால் சுட்டபோது துப்பாக்கிக் குண்டின் வேகத்தையும் மிஞ்சி அப்பறவை தப்பித்து ஓடியது.

அன்றிலிருந்து கக் பீவர் அந்தப் பறவையின் வேகம் என்ன? அது மணிக்கு எத்தனை கிலோ மீற்றர்கள் பறக்கிறது? என்று எங்கும் விசாரித்துப் பார்த்தார். பல புத்தகங்களிலும் தேடிப் பார்த்தார். அவருக்கு சரியான விடை கிடைக்கவில்லை. உடனே அவர் தாமாகவே அந்தப் பறவையின் வேகத்தைக் கணித்துக் கொண்டார். இதே போன்று உலகத்தில் எத்தனையோ சங்கதிகள், அற்புதமான சாதனைகள் நிகழ்ந்திருக்கக் கூடுமென்று உணர்ந்த கக் பீவர், எல்லாவற்றையும் தேடித்தொகுத்தார். வருடாவருடம் அந்தச் சாதனைகளில் மாற்றங்களையும் கண்ணுற்ற 'கக்' வருடா வருடம் ஒரு புத்தகத்தைக் வெளிக்கொண்டு வரத் தீர்மானித்தார். அதுவே கின்னஸ் என்ற புக் ஒ.்.ப் த வேல்ட் நிறுவனம் வெளியிடும் கின்னஸ் என்ற சாதனைகளின் தொகுப்பாகும்.

### பிறந்தநாள் வாழ்த்து



மட்டக்களப்பு 344/24 சந்திரா ஒழுங்கையைச் சேர்ந்த சத்தியராஜ பிரியசகி 28-1-1998 அன்று முதலாவது பிறந்தாநாளை கொண்டாடினார்.



திருகோணமலையைச் சேர்ந்த செல்வன் யோ. நிலோஜன் தனது 5ஆவது பிறந்த தினத்தை 04-02-1998 அன்று தனது பெற்றோருடன் கொண்டாடினார்.



வவுனியா தோணிகல்லை பிறப்பிடமாகக் கொண்ட விஸ்வலிங்கம் கிங்ஸ்லிதாசன் 8-2-98 ல் தனது 1வது பிறந்தநாளை தனது இல்லத்தில் விமரிசையாக கொண்டாடினார்.

## அறிந்து கொள்ளுங்கள்
## உலகில் பெரியன எவை என்று தெரியுமா?

01. உலகில் மிகப் பெரிய கண்டம் எது?
*ஆசியாக்கண்டம்.*
02. உலகில் மிகப் பெரிய சமுத்திரம் எது?
*பசுபிக் சமுத்திரம்.*
03. உலகில் மிகப் பெரிய பாலைவனம் எது?
*சகாராபாலைவனம்*
04. உலகில் மிகவும் பெரிய தீவு எது?
*கிரீன்லாந்து*
05. உலகில் மிகப்பெரிய நூலகம் எது?
*லெனின் தேசிய நூலகம் மொஸ்கோ.*
06. உலகில் மிகவும் உயரமான பறவை எது?
*தீக்கோழி*
07. உலகில் மிகவும் பெரிய சுவர் எது?
*சீனப் பெருஞ் சுவர்.*
08. உலகில் மிகவும் பெரிய விலங்கு எது?
*திமிங்கலம்*
09. உலகில் மிகவும் பெரிய சிகரம் எது?
*எவரஸ்ட் மலை சிகரம்.*
10. உலகில் மிப்பெரிய மலை எது?
*இமயமலை.*
11. உலகில் மிகப் பெரிய தேவாலயம் எது?
*உரோமாபுரியிலுள்ள சென்பீற்றர்.*
12. உலகில் மிகப் பெரிய விரிகுடா எது?
*ஹட்சன் விரிகுடா*
13. உலகில் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சி எது?
*விக்டோரியா.*
14. உலகில் மிகப் பெரிய வளைகுடா எது?
*மெக்சிக்கோ வளைகுடா.*
15. உலகில் மிகவும் குளிர் உள்ள இடம் எது?
*லொக்கோயார்ஸ்க்.*

ஆரையம்பதியில்
எமது விற்பனை முகவர்
**மதி குரோசரீஸ்**
பிரதான வீதி
ஆரையம்பதி-02



### அம்பாறையில் முதலிடம்

அனோஜன் பேரின்பராஜா 5ம் வகுப்புப் புலமைப்பரீட்சையில் அம்பாறை மாவட்டத்தில் அதி கூடிய புள்ளிகளைப்பெற்று (165) முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் கல்முனை கார்மெல் பாத்திமா தேசியக் கல்லூரி மாணவராவார். இவர் சட்டத்தரணி, எம்.கே.பேரின்பராஜா திருமதி அன்னபூர்ணா பிரதிஅதிபர் கல்முனை கி.கி.மி. மகாவித்தியாலயம் ஆகியோரின் சிரேஸ்ட புதல்வராவார்.

மூதூர் பிரதேசத்தில்
தினக்கதிர்
விற்பனை முகவர்
ராஜாஸ் புத்தகசாலை
நொக்ஸ் வீதி
மூதூர்-03
தொலைபேசி 065 - 38355
உரிமையாளர்:- T. நவரெட்டினராசா.

### புலமைப்பரிசில் சித்தி



மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய மாணவன் சிவாஸ்கரன் கடந்த ஆண்டு நடைபெற்ற புலமைப பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

### பாராட்டு விழா

(அம்பாறை மாவட்ட நிருபர்)

யாழ்ப்பாணத்திலிருந்து "தமிழ் நேசன்" எனும் பத்திரிகையையும், மட்டக்களப்பிலிருந்து "திலகம்" எனும் பத்திரிகையையும் வெளியிட்ட முதுபெரும் பத்திரிகையாளர் டாக்டர்.ஏ.பி.எஸ்.குட்டி நிந்தவூரில் பாராட்டி கௌரவிக்கப் பட்டார். நிந்தவூர் அல்-ஹுரதா கல்வி நிலைய வருடாந்த விழாவின் போது, விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட திகாமடுள்ள மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம்.முகைடீன் பத்திரிகையாளர் டாக்டர். குட்டிக்கு பொன்னாடை போர்த்த, விசேட அதிதியாகக் கலந்து கொண்ட துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் இணைப்புச் செயலாளர் எம்.ரி.ஹஸனலி விருதுவழங்கியும் கௌரவித்தனர்.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் அன்னாருக்கு வாழ்த்துப் பிரசுரம் ஒன்றையும் விழாவின் போது வெளியிட்டிருந்தது.

மேலும் டாக்டர். குட்டி தமது பத்திரிகைத்துறை தொடர்பான ஆவணங்களை தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகத்திற்கு ஒப்படைத்துள்ளார்.

### வானம் பார்!

**வானம் பார்.... வானம் பார்.**
**விரிந்த பரந்த வானம் பார்!**
**நிலவு மிதக்கும் வானம்!**
**நீல நிற வானம் பார்!**

**தூரமான வானம் பார்!**
**தூறல் போடும் வானம் பார்!**
**கடலைத் தொடும் வானம்**
**காலை ஜொலிக்கும் வானம்!**
**மழைவிட்ட வானம் பார்!**
**மாலை நேர வானம் பார்!**
**மகிழ்ச்சி தரும் வானம் பார்!**

### பிறந்தநாள் வாழ்த்து

சிறுவர் சிறுமியர்களின் பிறந்தநாள் வாழ்த்துக்கள் இப்பகுதியில் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி புகைப்படம், பிறப்பு சான்றிதழ் நிழற்பட பிரதி (Photo Copy) என்பனவற்றை இணைத்து 10 நாட்களுக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.பிரசுரிக்கப்படும்.

பிறந்தநாள் வாழ்த்து

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

பிறந்த திகதி : ..............................................

..............................................
பெற்றோர் / பாதுகாவலர்
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்கதிர்
வார வெளியீடு

THINAKKATHIR WEEKLY



P.O. BOX -06
6, St. Michael Street,
Batticaloa.
Srilanka.
phone:-065-23055


## மூதூர் பிரதேசத்தில் சேவாலங்கா நிறுவனத்தின் அபிவிருத்தி வேலைகள்

மூதூர் பிரதேசசெயலகத்திற்குட்பட்ட கிராமங்களில் உள்ள வறிய மக்களுக்குதவும் பொருட்டு சேவாலங்கா நிறுவனம் தனது அபிவிரத்தி வேலைத் திட்டங்களை அபிவிருத்தி முகாமையாளரூடாகவும். வெளிக்கள உத்தியோகத்தர் ஊடாகவும் செய்து வருகின்றது.

இதன் பொருட்டு மூதூர் பிரதேசத்தில் உள்ள பாதிக்கப்பட்ட கிராமங்களான பெரிய வெளி. பாலத்தடிச்சேனை, கங்குவேலி, முல்லைத்தீவு, முன்னம்பேடிப்வெட்டை, பாரதிபுரம் ,மேன்காமம், இருதயபுரம் போன்ற கிராமங்களிலும் வேறு பல வேலைகளைச் செய்து வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த வகையில் இருதயபுரக்கிராமத்தில் உள்ள சிறுவர்களின் நலன் கருதி பாலர் பாடசாலை ஒன்றை அமைத்துக் கொடுத்ததோடு அக்கிராம மக்களுக்கு வீட்டுத் தோட்டச் செய்கைக் குரிய உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

இதே போன்று பெரிய வெளிக் கிராம விவசாயிகளுக்கு இரு சக்கர உழவியந்திரத்தை வழங்கி அவர்களுக்கு விவசாயம் செய்வதற்காகவும், அத்துடன் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் பொருட்டு செங்கல் வெட்டுவதற்குக் கடன் வசதிகளையும் இப்பகுதி சேவாலங்கா நிறவனத்தின் அபிவிருத்தி முகாமையாளர் திரு. ம. தவராஜா அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ தனது விரிவான சேவையினை வழங்கி வருகின்றது.

மற்றும் ஏனைய கிராமங்களுககும் விவசாய வீட்டுத் தோட்ட உபகரணங்களையும் பயிர் விதைகளையும் வழங்குவதோடு மட்டுமல்லாது இதில் பயன் பெறுவோருக்கென தனியான பயற்ச்சி ஒன்றினை முன்னம் பேடிவெட்டை விவசாய பயற்ச்சி நிலையத்தில் நடத்திவருவது அப்பகுதி மக்களுக்கு விவசாய அறிவினை மேலும் விருத்தியடையச் செய்யக் கூடிய நடவடிக்கை என்பது குறிப்பிடத் தக்கது. இப்பயிற்சியினை அப்பகுதி விவசாய போதனாசிரியர் மூலமாக நடாத்தி வருவதனால் அப்பகுதி வறிய மக்கள் நல்ல முறையில் பயன் பெறுவதோடு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அன்றாடச் செலவினங்களை மட்டுப்படுத்தக் கூடியதாகவும் உள்ளதாக சேவாலங்கா நிறுவனத்தின் அபிவிருத்தி முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

## நிரந்தரகாணி உரிமை கோரி அகதிகள் நடத்திய அமைதிப்பேரணி

வேளாங்கன்னி ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள அரச காணிகளில் குடியிருக்கும் 250க்கு மேற்பட்ட குடும்பங்கள் தாங்கள்குடியிருக்கும் காணிகளுக்கு உறுதிவழங்கக் கோரி 16 ஆம் திகதி காலை அமைதிப் பேரணி ஒன்றை நடத்தினர்.

மண் முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் திரு.சி. புண்ணியமூர்த்தியிடம் சென்று மகஜர்



ஒன்றையும் கையளித்துள்ளனர்.

இம்மக்களின் பிரச்சனை நீண்டதொரு பிரச்சனையாகும். கடந்த 90 ஆம் ஆண்டு வன்செயலின் போது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக அலைந்த மக்கள் கல்லடிக் கடற்கரையில் குடியேறினர்.

பொதுவாக மீனவக் குடும்பங்களான இவர்கள் செட்டிபாளையம், கோப்பாய் வெளி, பெரிய புல்லுமலையைச் சேர்ந்தவர்கள். அகதிகள் எனும் அந்தஸ்துப் பெற்ற போதும் அரச காணிகளில் அத்து மீறிக் குடியேரியோர் எனும் பட்டம் சூட்டப்பட்ட நிலையே இவர்கள் வாழக்கையில் அமைந்தது.

குடியேறிய காலம் முதல் நிரந்தர வீடு, கிணறு நிலை தமக்கு ஒரு நிரந்தரப் பயிர்களை நடமுடியாத நிலையில் அரச அதிகாரிகள் உட்பட வடக்குக் கிழக்கு மாகாண ஆளுனர், மட்/மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரிடமும் நிரந்தரக் குடியுரிமை வழங்க வேண்டுமென கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது. ஆயினும் எதுவும் இதுவரை நடைபெறவில்லை.

கடற்கரைக் காணிகளில் இருப்பது சட்டவிரோதமனது. கடலரிப்பு ஏற்படுகிறது. எனக்காரணம் காட்டும் அரச அதிகாரிகள் திராய்கேணி மீள்குடியேற்றத் திட்டத்தில் சேர்ந்து அங்கு குடியிருக்குமாறு கோரியுள்ள திராயகேணி மக்கள் விவசாயிகள், கல்லடிக் கடற்கரை மக்கள் மீனவர்கள் எனவே தொழில் ரீதியான பிரச்சினை உருவாகும்.

இதேவேளை மடடுமா நகரில் உள்ள சில அரசியல்வாதிகளுக்கும், அரசாங்க உத்தியோகத்தருக்கம் இப் பகுதியிலுள்ள காணிகளுக்கு அரச அனுமதிப் பத்திரம் உள்ளது.

இப்பேரணியை மட் மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் திரு. ராஜன் மயில்வாகனம் முன்னின்று நடத்தினார். மகஜர் கையளிக்கப் பட்டதைத் தொடர்ந்து இக்காணிகளுக்கு அரச அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுப்பதாகபிரதேச செயலாளர் உறுதி மொழி வழங்கினார்.

(பா. வேணுகோபால்)

## உத்தேச அரசியல் யாப்புத் திட்டம் உருவாகிய பின்பே ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படும்

-சட்டமாஅதிபர்

உத்தேச அரசியல் யாப்புத் திட்டம் உருவாக்கப்பட்ட பின்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை இல்லாது ஒழிக்கப்படும் என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சனைக்கான தீர்வு விடயத்தில் அதிகார அலகுகள் வழங்கும் விடயத்தில் ஆளும் கட்சியும், எதிர்கட்சியான ஐ.தே.க.வும் விட்டுக்கொடா முரண்பாடுகள் கொண்ட நிலையில் இருக்கின்றன.

1994ம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னனி அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவது நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும். ஜனாதிபதி தேர்தல் முறையை இல்லாது ஒழிப்பதற்காகவன்றி அதில் நிலைத்திருப்பதற்கல்ல எனக் கூறப்பட்டது.

ஆனால் நாலு வருடங்களாகின்ற போதிலும் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு நிலையான தீர்வை வழங்கமுடியாத அரசு எதிர்கட்சிகளின் ஆலோசனைகளுக்கும், புத்தபிக்குகளின் போர் வெறிக்கும் கட்டுப்படவே நினைக்கிறது.

இன்நிலையில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டால் என்ன? அல்லது நீடித்தால் தான் என்ன? தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வு விடயத்தில் அவை எந்த அனுகூலங்களையும் ஏற்படுத்தப்போவதில்லை என்பது உறுதியாகும்.

கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் புலிகள் மறுபுறம், வெளிநாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழரிடமிருந்து கிடைக்கும் நிதி மூலம் பொருளாதாரப்பலம் மிக்கவர்களாகவும் விளங்குகின்றனர். வெளிநாட்டுக் கொடிகளுடன் 3 கப்பல் கம்பனிகளை நடாத்தி வருவதுடன், ஆகக் குறைந்தது 5 சரக்குக் கப்பல்களையாவது கொண்டுள்ளனர்.

பிரச்சாரத்தைப் பொறுத்தவரை உலகளாவிய அமைப்பொன்று புலிகளிடம் உண்டு. தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள இடமொன்றில் அல்லாது இங்கிலாந்திலேயே தமது சர்வதேச தலைமையகத்தை அவர்கள் கொண்டுள்ளனர்.

யுத்த முனைச் செய்திகள் ஒரு சில மணித்தியாலங்களில் லண்டனுக்கு அனுப்பப் பட்டு, அங்கிருந்து உலகம் முழுதும் அனுப்பப்படுகின்றன. 1ம், 2ம், ஈழ யுத்தங்களின் போது புலிகளின் பிரச்சாரம் பெரும்பாலும் ஆயுதக்கொள்வனவிற்கும், யாழ். குடாநாட்டில் தாம் நடத்திய நிர்வாகத்திற்கும் தேவையான நிதியை திரட்டுவதையே நோக்கமாகக்கொண்டிருந்தது. ஆனால் தற்போது தனிநாட்டுக்கான கோரிக்கையை சட்டபூர்வமாக்குவதற்கு பிரச்சாரம் செய்வதற்கும் ஒரு தொகை நிதி செலவிடப்படுகின்றது.

1981 தொடக்கம் 12,000க்கும் மேற்பட்ட படைவீரர்கள் இதுவரை கொல்லப் பட்டுள்ளனர். இதைவிடப் பன்மடங்கினர் தமது அவயவங்களை இழந்து மீண்டும் யுத்தத்தில் பங்குபற்றமுடியாதவர்களாயுள்ளனர்.

புலிகள் தரப்பில் 10,000 பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

பொதுமக்களைப்பொறுத்தவரை 50,000க்கும் மேற்பட்டோர் இதுவரை பலியாகியுள்ளனர்.

இவ்வாறான நிலைமைகள் இருக்கையில் தமிழ் மக்கள் சுதந்திரதினப்பொன்விழாக் கொண்டாட்டங்களில் பங்கெடுப்பது எங்ஙனம்? முழுநாட்டு மக்களுக்குமென சுதந்திர தினம் கொண்டாடப்படுவது எங்ஙனம்? ஆட்சியாளர்கள் உண்மையிலேயே இலங்கையின் சுதந்திர தினத்தை உண்மையான சுதந்திர தினமாகக் கொண்டாட நினைத்தால் செய்ய வேண்டியது தமிழர்களின் இறைமையைத் திரும்பித் தருவதே!

ஸ்ராலின்

நன்றி "சண்டேரைம்ஸ்"

## இக்பால் அத்தாசுக்கு அச்சுறுத்தல்

இராணுவ அரசியல் ஆய்வுக்கட்டுரைகளை எழுதிவரும் பிரபல பத்திரிகையாளர் இக்பால் அத்தாசுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

பாதுகாப்பு படையிலுள்ள சிலராலேயே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி அச்சுறுத்தல் தொடர்பாக விசாரணைகள் நடாத்தப்படும் என ஜனாதிபதியும், தகவல் தொடர்பு அமைச்சரும் தெரிவித்துள்ளனர்.

பத்திரிகையாளர் அச்சுறுத்தப்படுவது குறித்து சுதந்திர பத்திரிகையாளர் சங்கம் கண்டணத்தை தெரிவித்துள்ளது.


வவுனியாவில் எமது
தினக்கதிர்
விற்பனை முகவர்.
கே.பி.கே. சென்ரர்.
24, பஸ் நிலையவீதி
வவுனியா.
தொலைபேசி - 024 - 22504


### அறிமுகவிழா

(15.02..98.) 10.00 மணிக்கு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் "சம்பந்தரின் சிறுகதைகள்" ஸ்ரீகநேசன் எழுதிய "யாழ்ப்பாணத்து நாடகங்கள்" என்ற இருநூல்களின் அறிமுகவிழா நடைபெற்றது.

கலாநிதி சி.மௌனகுரு தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிழக்குப்பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் திரு சி.சந்திரசேகரம் திரு வி. இன்பமோகன் ஆகியோர் அறிமுகவுரை நடத்தினர். விபுலம் வெளியீட்டகத்தின் ஆதரவில் நடைபெற்ற இவ் விழாவில் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம் பெற்றது.

திற்கு அதே 1500 ரூபாய் பெறுமதியான முத்திரைகளே வழங்கப் படவுள்ளதாக தெரிகிறது.

கடந்த ஜனவரி மாதத்துடன்மேற்படி முத்திரைப் புள்ளிகள் முடிவடைந்த நிலையில் 98 ஜனவரியில் இருந்து சமுர்த்தித்திட்டம் பூரணமாக அமுல் படுத்தப்படும் எனக் கூறப்பட்டது.

ஆனால் மீண்டும் அதே முத்திரைகள் வழங்கப்பட இருப்பது சமுர்த்தித்திட்டம் மட் மாவட்டத்தில் பூரணமாக அமுல்படுத்தப் படுமா என கேள்விக் குறியாகவே உள்ளது.

### அன்பான வாசகர்களுக்கு!

தினக்கதிரின் 6வது;7வது இதழ்கள் இணைந்து வருகின்றது. எமது பிரதேசத்தில் தொடர்ச்சியாக நிகழும் மின்சார தடை எமது வருகையையும் பாதிக்கின்றது. இன்றைய போர்க்கால சூழ்நிலையில் எம் மக்களின் பிரச்சனைகளை வெளிகொணரும் நோக்கில் வெளிவரும் தினக்கதிர் அதன் வருகையை தொடர்ச்சியாக்க தனது சக்திக்குட்பட்ட வகையில் தொடர்ந்தும் செயற்படும் என்பதை எமது வாசகர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்.

- ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் மட்டக்களப்பு ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் 1998 பெப்.8 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது